Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNODDAM

வெளியீடு – 63 | 20 ஒக்ரோபர் 2011 | விலை : 10.00

# தமிழ் மக்களின் பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவத்தின் கடமை!

கடந்து வந்த முப்பது வருடங்களில் தமிழ் மக்கள் சந்தித்த பேரழிவுகளும், இழப்புக்களும் உலகறிந்தவை.

வன்னியில் யுத்தத்தின் இறுதியில் இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் மக்கள் ஒழுங்காக தமது நிலங்களில் மீள் குடியேற்றப்படாத நிலையில் இன்னும் அவர்கள் நிம்மதி பெருமூச்சு விடாத நிலையில் மேலும் இரண்டரை லட்சம் மக்கள் உள்ளூரில் இடம் பெயர்ந்த நிலையில் தமிழகத்தின் அகதிமுகாம்களில் ஒரு லட்சம் பேர் வாழும் நிலையில் இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் காணிகளை பதிவு செய்தல் மற்றும் பிரதேச செயலகங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்தல் எவ்வளவு தூரம் பொருத்தப்படான விடயம் என்ற கேள்வி எழுகிறது.

பேரினவாத நிகழ்ச்சி நிரலுடனான செயற்பாடுகளா இவை என்ற சந்தேகம் பரவலாக தமிழ் மக்கள் மத்தியில் எழுந்திருக்கிறது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் குடித்தொகை பரம்பல் 1981 இற்கு முன்னர் இருந்த சனத்தொகை மற்றும் இயற்கையான மக்கள் தொகை அதிகரிப்பு எல்லாவற்றையும் கணக்கெடுத்தால் இன்று இத்தொகையில் ஐம்பது வீதத்திற்கு குறைவானவர்களே வடக்கு கிழக்கில் வாழ்கிறார்கள்.

இந்த மாதிரியான சூழ்நிலையில் வடக்கு கிழக்கில் காணிகளை பதிவு செய்தல் பிரதேச செயலகங்களின் எல்லைகளை மாற்றியமைத் தல் என்பது ஒரு சமூகம் என்ற ரீதியில் நிகழ்ந்த பேரழிவு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தையும் பிரதேச எல்லைகளையும் மாற்றியமைப்பதற்கான வாய்ப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டது. எரிகிற வீட்டில் கொள்ளி பிடுங்குவதற்கு ஒப்பான செயலாகும்.

உண்மையில் இன்று தமிழ் மக்களின் நெஞ்சங்கள் புகைந்து கொண்டிருக்கின்றன.

ஒரு அதிகாரப்பகிர்வு கட்டமைப்பை ஏற்படுத்தாமல் தமிழ் மக்களின் பிரதேசங்களை துண்டு துண்டாக கத்தரிப்பதும், தாம் விரும்பிய வாறு ஒட்டுவதும் என்ற விளையாட்டு அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களின் அறுபது ஆண்டுகால கோரிக்கையான இனப்பிரச்சனைக்கு அதிகாரப்பகிர்வு ஊடான தீர்வு இன்றுவரை சுவிங்கமாக இழுபட்டுக் கொண்டிருக்கிறது.

அந்தத் தீர்வை தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தியா உட்பட சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறது.

அரசு பாராளுமன்றத் தெரிவுக்குழு என்று மேலும் காலத்தை இழுத்தடிப்பதற்கான உபாயங்களை கையாள்கிறது.

அரசியல் தீர்வு அதற்குரிய அதிகாரப்பகிர்வு கட்டமைப்பு என்பன ஏற்படுத்தப்படாதவரை வெட்டுதல், ஒட்டுதல் அடித்தல் திருத்தல் என்ற வேலைகள் நடைபெறக்கூடாது. இதனை உறுதியாக அரசுக்கு எடுத்துக்கூற வேண்டியது தமிழ் மக்களின் பொறுப்புவாய்ந்த தலைமைகளின் கடமை. ஆனால் இதனை அவர்கள் இன்றுவரை மேற்கொள்ளாமல் இருப்பது துரதிஷ்டமானது.

இனவாத நோக்கங்களிலான முல்லைத்தீவு தமிழ் கிராமங்கள் சிலவற்றையும் வெலிஓயா சிங்கள கிராமங்கள் பலவற்றையும் இணைத்து பிரதேச செயலகங்கள் உருவாக்குவதாக இருந்தாலும் சரி, வடக்கு கிழக்கில் ஏனைய பிரதேச செயலக இணைப்பு பிரிப்பாக இருந்தாலும் சரி இவையெல்லாம் ஒரு அதிகாரப்பகிர்வு கட்டமைப்பு வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்டு ஒரு அதிகாரப்பகிர்வு அரசாங்க முறைமை உருவாக்கப்பட்டதன் பின்னர் அந்த அரச நிர்வாக கட்டமைப்புடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

அதைவிடுத்து இப்போது அவசர அவசரமாக அள்ளித்தெளித்த கோலமாக மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் பேரினவாத கபட உள்நோக்கங்களை கொண்டதாகவே மக்கள் கருதுகிறார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு இது விடயத்தில் நெல்லிக்காய் மூடை மனோபாவத்தில் இருக்காமல் ஒரு கருத்தொருமைபாட்டுடன் அனைத்து தமிழ், ஜனநாயக அரசியல் சக்திகளையும் ஒருங்கிணைத்து இது விடயத்தில் செயற்படுவதற்கு முன்வர வேண்டும். மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் அகிம்சை வழியிலான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதுவே ஒரு சமூக பொறுப்புள்ள சமூக அக்கறையுள்ள தலைமையின் கடமையாக இருக்கும்.

## இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய் தமிழ்த் தலைவர்கள் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளி விவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய்க்கும் தமிழ்த் தரப்புக்குமிடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது. சுமார் 45நிமிட நேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச் செயலாளர் தி.சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், இந்திய வெளி விவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய் அவர்களுடன், இந்திய அதிகாரிகளும், இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா, பிரதி உயர் ஸ்தானிகர் குமரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். இதன் போது, வடக்கு கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் ஒவ்வொரு சிவில் நிர்வாக அலுவல்களிலும் இராணுவத் தலையீடு இருப்பது தொடர்பில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. அத்துடன் திருகோண மலை, சம்பூர் அனல்மின் நிலைய திட்டத்தினால் குடிபெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றம் பற்றியும், பொதுவாக பெரியளவிலான அபிவிருத்தி திட்டங்கள் உருவாக்கப் படும்போது அதனால் இடம்பெயரும் மக்களுக்கான மீள்குடியேற்றம், அவர்களுக்கான வாழ்வாதாரம் என்பவை அத்திட்டத்தில் அடங்கும் வகையில் அமையப்பெற வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினர். சம்பூர் அனல்மின் நிலையத் திட்டத்தில் அப்படியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அத்துடன் வடக்கில் பிரத்தியேகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, அங்கு இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதையும், காணிகள் மீள் பதிவு நடவடிக்கையால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்கள், காணிகளை இழக்கக்கூடிய நிலைமைகள் தொடர்பிலும் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது.







## பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்

### மத்திய – மாகாண அரசுகளிடம் கோரிக்கை

**இரா. துரைரெத்தினம்**

கிழக்கு மாகாணத்தில் உள்வாரி வெளிவாரிப் பட்டப்படிப்பை முடித்த பட்டதாரிகள் கிட்டத்தட்ட 3500 க்கும் மேற்பட்டவர்கள் வேலையற்று இருக்கிறார்கள். இவர்கள் சுமார் 10 வருடங்களாக வழங்கப்பட்ட நியமனங்களில் உள்வாங்கப்படாமலும் தங்களுக்கு பொருத்தமான எவ்வித வேலை வாய்ப்போ தொழில் வழிகாட்டல் வழிமுறைகளோ இன்றியும் 45 வயதையும் தாண்டி பரிதவிக்கின்றனர் .

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலைப்பிரிவில் அண்ணளவாக 1300 பேரும் ஏனைய பிரிவுகளில் 200 பேரும் உள்ளனர். உள்வாரிப் பட்டப்படிப்பை முடித்த 450 பேர்களிலும் வெளிவாரி பட்டப்படிப்பை முடித்த 1050 பேர்களிலும் சிறு தொகையிரான சுமார் 75 பேர்கள் மாத்திரம் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் .

இவர்கள் யுத்த சூழ் நிலையில், உயிராபத்துக்கு மத்தியிலும் வறுமைச் சூழலிலும் தங்கள் பட்டப்படிப்பை முடித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கடந்த காலத்தைப் போல அரசாங்கம் பல துறைகளிலும் தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தரும் என்னும் நம்பிக்கையுடன் வாழ்கின்றனர். இதற்கான முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர் இவர்களின் செயற்பாடுகள் நியாயமானவைகளாகும்.

பட்டதாரிகளை அவர்களின் தராதரத்திற்கு ஏற்றவாறு துறைசார்ந்த பணிகளில் ஊக்குவிக்கக்கூடிய எந்தத் திட்டத்தையாவது கிழக்கு மாகாணசபை முன்வைத்துள்ளதா என்பது பட்டதாரிகளுக்கு மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களாகும்



இந்தவருடம் தொழில்வாய்ப்புக்கான விண்ணப்பம் கலாச்சார உத்தியோகஸ்தர், கரையோரம் பேணல் உத்தியோகஸ்தர், திட்டமிடல் உத்தியோகஸ்தர், அழகியல் கலை ஆசிரியர், விவசாய வெளிக்கள உத்தியோகஸ்தர், துறைசார்ந்த பட்டதாரிகள் ஆசிரியர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்தர், விவசாய உத்தியோகஸ்தர் பதவி உட்பட இன்னும் சிலவற்றிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மத்திய அரசின் வழிகாட்டலின் பேரில் கிழக்கு மாகாணம் ஒவ்வொருவருடமும் 400 - 600 இடைப்பட்டபேரை நியமிக்கும் முறைமையை கடைப்பிடித்து வருகின்றது. இந்நியமனங்கள் சகல திணைக்களங்களையும் உள்ளடக்கியவையாகும் இந்த வழிமுறையையே பட்டதாரிகள் தொடர்பாக கிழக்கு மாகாண சபையும் பின்பற்றுகின்றது. இதன்காரணமாக பட்டதாரிகளும் என்றோ

(தொடர்ச்சி 7ம் பக்...)

பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் பக்கம்- 04
இயற்கையும் மனிதனும் இன்புற்றிருக்க பக்கம்- 05
பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு பக்கம்- 07
தோழர்களை நினைவு கூருகிறோம் பக்கம்- 08







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

Kannoddam



## பேரினவாதம் நாட்டின் அபிவிருத்திக்கு எதிரானது

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை அரசியலில் இனவாதம் ஒரு பிழைப்புக்கான பண்டமாக மாற்றப்பட்டிருக்கிறது.

இதன் விளைவு இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி மிகப் பாரதூரமாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இனவாத அரசியல் வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் மக்களின் ஜனநாயக உரிமைகளை படிப்படியாக மறுத்து வந்திருக்கிறது.

குறிப்பாக பேரினவாத நோக்கில் அமைந்த பொலிஸ், இராணுவ கட்டமைப்புக்கள் கடந்த அறுபது ஆண்டுகளில் மக்கள் மீது ஒரு சுமையாக வளர்ந்த அளவிற்கு இலங்கையில் ஜனநாயக கட்டமைப்புக்கள் வளர்ச்சியடையவில்லை.

கடந்து வந்த நாற்பது வருட்ங்களுக்கு மேலாக அவசரகாலச்சட்டம் ஒரு சில சந்தர்ப்பங்களில் தளர்த்தப்பட்டிருந்தாலும் பொலிசுக்கும், இராணுவத்துக்கும் வரம்பற்ற அதிகாரங்களை வழங்குவதாகவே அமைகின்றது.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத் தடைச்சட்டம் இங்கு முடிவில்லா கதையாகத் தொடர்கிறது.

மக்களின் வாழ்வு ஜனநாயக மயப்படுத்தப்படுவதில் சமூகங்களிடையே அதிகாரப்பகிர்வு நிகழ்தல் மத்தியில் உள்ள அதிகாரங்களை பிராந்திய மட்டங்களுக்கு மாற்றுதல் சகல விதமான தீண்டாமை ஒடுக்குமுறைகளையும் ஒழித்தல், கருத்துச் சுதந்திரம், சமூக பாதுகாப்பு என்பன முக்கியமான அம்சங்களாகும்.

இலங்கையில் சட்டம் ஒழுங்கு என்பதைவிட பொலிஸ் என்பது மக்கள் மீதான அதிகாரம் பேரினவாதம் ஆகிய உள்ளடக்கங்களைக் கொண்டு ஒரு போர்க்கால இயந்திரமாக கட்டப்பட்டுள்ளது. அது சட்டம் ஒழுங்கு துறை என்ற அடையாளத்தில் மிகவும் பலவீனமான ஒன்றாக காணப்படுகிறது.

நீதித்துறையும் இதனைச் சார்ந்த இயங்க வேண்டியிருக்கிறது.

இதன் விளைவு சமூகத்தில் ஒரு நிரந்தர பீதிநிலை காணப்படுகிறது. உற்சாகமாக எந்தக் காரியத்தையும் ஆற்றுவதற்கான மனநிலையை இல்லாதொழித்து கூனிக்குறுகி வாழ்தல் அல்லது பயத்துடன் வாழ்தல் அல்லது கோபத்திற்கும் விரக்திக்கும் உள்ளாதல் என்ற போக்கு காணப்படுகிறது.

காவல்துறை மக்களின் நண்பன் என்ற வார்த்தைகள் அலங்காரமாக வீதிகளில் காணப்படலாம். ஆனால் காவல் நிலையம் செல்லுதல் என்பது இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் விரும்பாத ஒரு விடயம்.

உண்மையில் சமூகத்தில் படைப்பார்வமும் தொழில்துறை அபிவிருத்தியும் சுதந்திரமானதொரு மனநிலையிலேயே ஏற்பட முடியும். ஆந்த ரம்மியமான மனநிலை இலங்கை சமூகத்திடையே துரதிஷ்டவமாக இல்லை.

யுத்த காலத்தில் கூடுதலான பதற்ற நிலை காணப்பட்டிருக்கலாம் ஆனால் இன்று ஏதோவொரு விதமாக பதற்றநிலை பராமரிக்கப்படுகிறது.

மக்கள் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய மனநிலை சிறிதளவும் உதவாது.

ஐரோப்பிய வட அமெரிக்க நாடுகள் பெரும் யுத்தங்களை சந்தித்தவை.

இந்தியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் தார்மீக நெறிமுறைகளைக் கொண்ட சுதந்திர இயக்கங்களை கொண்டிருந்தவை.

பல குறைபாடுகள் இருந்தாலும் மக்களின ஆற்றல் வெளிப்படுத்துவதற்கான இடைவெளி இங்கு காணப்படுகிறது.

ஐரோப்பாவிலோ, இந்தியாவிலோ பொதுவாக விறைத்த முகத்துடனான படையினரையோ, பொலிசாரையோ துப்பாக்கிதாரிகளையோ நாம் காணமுடிவதில்லை.

ஊடகங்க்ளின் சுதந்திரம் தெளிவாகக் காணப்படுகிறது. அண்ணா ஹசாரேவால் ஆரம்பிக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான விழிப்புணர்ச்சி இயக்கம் இந்தியா முழுவதும் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி நிகழ்த்தப்பட்டது.

இன்று அமெரிக்காவின் வீதிகளில் மக்கள் இயக்கங்கள் நடைபெறுகின்றன.

இந்த ஜனநாயக இடைவெளி மிகவும் முக்கியமானதாகும். மக்கள் வீதிகளில் இறங்கி கருத்துச் சொல்வதற்கான சுதந்திரம் எப்போதும் பேணப்பட வேண்டும்.

இலங்கையில் அது அருகி விட்டது எனலாம்.

சர்வாதிகார ஆட்சி நிகழும் மியன்மாரில் மக்கள் இயக்கம் கொடூரமாக ஒடுக்கப்பட்டன.

பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்குரிய தலைமைத்துவம் மியன்மாரில் உருவாகுவதற்குரிய இடைவெளி இன்னும் அங்கு வரவில்லை.

பொருளாதார சமூக அபிவிருத்தியை பார்த்தால் அது இன்னும் மிகவும் பின்தங்கிய நாடே.

இந்தியா இன்று வேகமாக வளர்ச்சிப் பெற்று வருவதற்குக் காரணம் அங்கு நிலவும் ஜனநாயக கட்டமைப்பே.

சமூக பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கான இடைவெளிகள் இந்தியாவில் இருக்கின்றன விரிவடைந்து வருகின்றன.

இலங்கையில் அத்தகைய இடைவெளி குறைந்து வருகிறது.

ஒரு சுபிட்சமான இலங்கை ஒரு வெற்றிகரமான இலங்கையில் ஜனநாயக கட்டமைப்புக்களை விரிவாக்குவதிலேயே தங்கியிருக்கிறது.

அது தானாக நடக்காது அதற்கு மக்கள் இயக்கங்களின் சுயாதீனமான இடையறாத செயற்பாடு அவசியம்.

கார்ல் மார்க்ஸின் வார்த்தைகளில் கூறுவதானால் ஒரு தேசியத்தை ஒடுக்கும் தேசியம் அதனூடாக தான் சுதந்திரமாக இருக்க முடியாது.

## காணிப்பதிவு திட்டத்தை கைவிடுமாறு
### ஜனாதிபதியிடம் ஆனந்தசங்கரி வேண்டுகோள்

மக்களின் சொந்தக் காணிகள், நம்பிக்கைச் சொத்தாக அல்லது வேறு விதமாக பொறுப்பேற்றிருக்கும் காணிகள் அத்தனையையும் அரசு பதிவதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் மக்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்பதனை மிக்க வருத்தத்துடன் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன். காணி அபிவிருத்தி அமைச்சினால் பி.எஸ்/01/2011 என்னும் இலக்கம் கொண்ட பத்திரம் மூலம் காணி சொந்தக்காரர்களிடமிருந்து காணிகளைப் பதியும் விபரங்களை அவ்வளவு சுலபமாக எவராலும் சேகரிக்கவும் முடியாது. மக்கள் தருவது கடினமானதாகும். மக்கள் இத்திட்டத்தை நியாயப்படுத்தவும் முடியவில்லை. அவர்களுக்கு எவ்வித பிரயோசனம் இருப்பதாக அவர்கள் உணரவும் இல்லை. இதை மேலும் அவர்களுக்கு தொந்தரவு தரும் விடயமாகவே மக்கள் கருதுவதோடு இதை அரசாங்கம் வேறு ஒரு நோக்கத்தோடு செய்வதாகவும் நம்புகின்றனர். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் அரசின் பல நடவடிக்கைகள் தமிழ் மக்களின் மனதை குழப்பி அமைதியற்ற வாழ்வை ஏற்படுத்தியது.

இத்திட்டத்தை நாடு முழுவதிலும் செயற்படுத்த அரசு உத்தேசித்திருப்பின் பல ஆண்டுகளாக இடம் பெயராமல் சொந்த வீடுகளில் மக்கள் சுமூகமாக வாழ்ந்த அம்மாவட்டங்களில் முதலில் ஏன் இத்திட்டம் செயற்படுத்தக் கூடாது. ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளில் போரினாலும் அடிக்கடி இடம் பெயர்வினாலும் மக்கள் போதியளவு பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர். சிலர் தம் வீடுகளில் இல்லை. சிலர் தம் சொத்துக்கள் அத்தனையோடும் சேர்த்து பல்வேறு ஆவணங்களையும் இழந்துள்ளனர். சிலர் நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளனர். இன்னும் சிலர் காணாமல் போயுள்ளனர். மரணசாசனம் எதுவும் விட்டுச் செல்லாது இறந்துவிட்டனர். மரணச் சாதனம் எதுவும் விட்டுச் செல்லாது இறந்தவர்களின் உருத்துத்தாரர்கள் சொத்துக்கும் தமக்கும் உரிமை உண்டென அறியாதவர்களாக உள்ளனர். சொத்துக்களை விட்டு இறந்த பிள்ளைகளின் சொத்துக்களுக்கு பலர் உரிமைகோரக் கூடும். இது போல் பல சிக்கல்கள் நிறைந்த பிரச்சனைகளும் உண்டு. சில சொத்துக்களால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு காணி அமைச்சரால் தீர்வு காண முடியாது. அத்தகைய பிரச்சினைகளை சிவில் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் தலையிடாமல் அப்பிரச்சனைகளை நீதிமன்றங்களில் நீதிபதிகள் தீர்த்து வைக்கட்டும். எற்கனவே ஏறக்குறைய உடைமைகள் அனைத்தையும் இழந்து நிற்கும் மக்கள் இத்திட்டத்தால் தாம் மேலும் பலவற்றை இழக்கலாம் என அஞ்சுகின்றனர். இத்திட்டம் ஓர் பயன்மிக்கதாக இருக்குமென நான் நம்பவில்லை. அவரவர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை அவர்களிடம் விட்டுவிட்டால் எவரின் தலையீடுகளுமின்றி அவர்களே தீர்த்துக் கொள்வார். தவறின் நீதிமன்றின் மூலம் அவர்கள் தீர்வு காண்பார்.

காணி, நிலம் அற்றவர்கள் காணி பெற விரும்பினால் அரசு அரச காணிகளை அடையாளம் கண்டு அவர்களின் குறைகளை தீர்க்கலாம். போதிய அளவு கஷ்டப்பட்டு போதியளவு இழந்துள்ள மக்களை தொந்தரவு செய்ய வேண்டாமென அதிகாரிகளை எச்சரிக்கவும். எல்லாவற்றிற்கும் மேலாக தம் உறவுகள் பலரை இழந்தும், தம் அன்புக்குரியவர்கள் என்றோ ஒரு நாள் தம்மிடம் வருவார்கள் என எதிர்பார்த்து நிற்கும் மக்களுக்கு இத்தகைய விடயங்களில் கவனத்தைச் செலுத்தக்கூடிய மனநிலையில் இல்லை. இத்திட்டத்தை கைவிடுமாறு காணி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கி எதாவது காணி சம்பந்தமாக பிரச்சினைகள் எழுந்தால் சம்பந்தப்பட்டவர்கள் பிரச்சனைக்குரியது உறுதிக்காணியெனில் நீதிமன்றிற்கும் பெமிற் காணியெனில் அரச அதிபரிடம் செல்லுமாறும் ஆலோசனை வழங்கவும். இக்கட்டத்திலேனும் தாங்கள் தலையிட்டு இத்திட்டம் அமுலாக்கப்படும் வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு போதியளவு துன்பத்தை கொடுத்துவிட்டது. எனவே இத்திட்டத்தை இரத்துச் செய்து மக்களுக்கு மன அமைதியை கொடுக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழித்தலும் முதியோர் நலன் பேணலும் சமூகத்தின் கடமையாகும் – இரா. துரைரெத்தினம்

ஒக்டோபர் 1 சிறுவர்-முதியோர் தினமாகும். இன்றைய சிறுவர்கள் நாளைய முதியோர் ஆகின்றனர். இடைப்பட்ட காலத்தில் அவர்கள் வயது வந்தவர்களாகி சமூக வாழ்வையும், குடும்ப வாழ்வையும் நடத்துகின்றனர். இந்த சிறுவர்களுக்கும், முதியோர்களுக்கும் நாம் பாதுகாப்பை வழங்க கடமைப் பட்டிருக்கின்றோம்.

இந்த விடயத்தில் அக்கறை கொண்டு செயல்படும் அரசியல் கட்சிகள் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனிப்பட்ட குழுக்கள்,மற்றும் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளினாலும் சேவையாலுமே ஒரளவிற்கேனும் இன்று சிறுவர்களும், முதியோர்களும் தலைநிமிர்ந்து நிற்கின்றனர் இந்த நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திய அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் யுத்த காலத்திலும் இடம் பெற்றன. ஆனால் அவைகள் வெளியில் தெரிய சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தன. சிறுவர் துஷ்பிரயோகங்கள் இன்று குறைந்தளவு நடந்தாலும் அவைகள் உடனுக்குடன் வெளிக்கொணரப் படுகினறன. மக்களுக்குள் தொடர்புகள் அதிகரிப்பு, வெகுசனத் தொடர்புசாதன வளர்ச்சி, கருத்துக்களை சுதந்திரமாக சொல்லக்கூடிய சூழ் நிலை போன்றவைகள் சமூகத்தில் இவ்விடயத்தில் விழிப்புணர்ச்சி உருவாக காரணமாக உள்ளன.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடை செய்வதற்கு இன்றைய உலகம் பல முயற்சிகளை மேற்கொள்கின்றது. அவைகள் அடிமட்ட சமூகத்திற்கு செல்வதில் ஏற்படும் தாமதத்தால் முற்றாக ஒழிக்க முடியாதுள்ளது. சமூகத்திலுள்ள பாரிய ஏற்றத்தாழ்வுகள் நாகரீக மோகம், அறநெறிப் பிறழ்வு, யுத்தம் ஆகிய, இன்னோரன்ன காரணிகளும் சிறுவர் துஷ்பிரயோகம், முதியோர் பராமரிப்பின்மை ஆகியவற்றிற்கு காலாகின்றன. இன்றைய சிறுவர், முதியோர் தினத்திலிருந்து சர்வதேசிய ரீதியாகவும், தேசிய மற்றும் மாகாண, மாவட்ட, கிராம மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிக்கவும், முதியோர் நலன்களைப் பேணவும் அவைகளின் காரணிகளை இனம் கண்டு களைந்திடவும் யாவரும் திடசங்கர்ப்பம் பூணவேண்டும்.

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

**அபிப்பிராயங்கள் விமர்சனங்கள் ஆலோசனைகளையும் ஆக்கங்களையும் வரவேற்கிறோம். அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்**


EPIC
PO BOX 431
SUTTON SM1 9LE
UK
email : eprlfp@yahoo.co.uk

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்ப்த்திரி வீதி
யாழ்ப்பாணம்.
021 222 2022

159, கடல்முக வீதி
திருகோணமலை.
077 9634902


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணசபை தேர்தல் - பேச்சுவார்த்தை - தீர்வு

காரணங்கள் இல்லாமல் பிரச்சினைகள் இல்லை என்பது உலகறிந்த உண்மை. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பிலும் அவ்வாறுதான் அடிப்படை பிரச்சினைகளுக்கான காரணங்களை ஒதுக்கிவிட்டு தீர்வுகாண முடியாது.

இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னான காலத்திலிருந்து நோக்கின் இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கான அடிப்படை காரணங்கள் என்னவென்பது இந்நாட்டின் பொறுப்புவாய்ந்த பதவியிலிருக்கும் முதல் குடிமகனுக்கு புரியாததல்ல.

கடந்த காலங்களில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள்- ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. அவை நிறைவேற்றப்படாமல் பேப்பர் கூடைக்குள் போனமையும் அதற்குப் பின்னரான உயிரழிவுகள், சொத்தழிவுகள், சுற்றுபுறச்சூழல் அழிவுகள் இனங்களுக்கிடையே விரிசல் என்பனவெல்லாம் அரங்கேறி முடிந்துவிட்டன. கிடைத்த சந்தர்ப்பங்களெல்லாம் தமிழ் தரப்பால் வெற்றிகரமாகவும் லாவகமாகவும் சிதறடிக்கப்பட்டன. இந்த சிங்கள, தமிழ் இனவாத சக்திகள் யார் என்பதை விளக்கத் தேவையில்லை. அவர்கள் மக்கள் சமாதானமாக வாழ்வதை விரும்பாதவர்கள், தற்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்வுக்கான பேச்சுவார்த்தை இரு தரப்பினரிடையே பல சுற்றுக்கள் நடந்த வண்ணம் இருந்தபோதும் இரு தரப்பினரும் என்ன பேசினார்கள் என்பது புதிராகத்தான் இருக்கிறது.

1987ம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளவற்றை நிறைவேற்ற திராணியில்லாதவர்கள் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டாக பிரிப்பதற்கு காரணமானவர்களிடம் இருந்து நாம் ஒரு நியாயமான தீர்வை எதிர்பார்க்கலாமா என்பதே கேள்வி. பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு மறு தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கையில் அதற்கான அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற்றுள்ளதா? அந்த மாகாண சபை அதிகாரமிக்க மாகாணசபையாக செயற்படுகின்றதா? இல்லவே இல்லை.

அப்படியிருக்கையில் வெகு விரைவில் வடக்குக்கான மாகாணசபை தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அதேவேளை இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையும் இடம்பெறுகின்றன. எப்படியோ வடக்கு மாகாணசபைக்கு பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இருதரப்பினரும் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதே வெளிப்படை

கிழக்கு மாகாணசபையை கைப்பற்றியது போல் அரசு தரப்பினர் வடக்கு மாகாணசபையை தம்வசம் கொண்டுவருவது பற்றி அவர்கள் அக்கறை கொள்வார்களா என்பதிலும் சந்தேகமே. ஏனெனில் நடந்து முடிந்த உள்ளுராட்சி சபைத் தேர்தலின் போது மக்கள் அரசுக்கு எதிராக த.தே.கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளார்கள். அரசின் மீது மக்கள் விரக்தி- வெறுப்படையும் அளவிற்கு அன்றாட நிகழ்வுகள் அமைகின்றன. இதெல்லாம் அரச தரப்பினருக்கு தெரியாததல்ல.

தமிழர்கள் மீதான மேலாதிக்க நிலை அதிகாரப்பகிர்வு தொடர்பாக நெகிழ்வுப் போக்கற்ற தன்மை பேரினவாத உணர்வுகளுக்கு தீனி போடுவது தமிழர் தரப்பின் கோரிக்கைகள் பிரிவினையை நோக்கியவை என தவறாக சித்தரிப்பது இவற்றின் மூலம் இலங்கையில் நியாயமான தீர்வுக்கான இடைவெளியை இல்லாதொழிப்பது.

கிழக்கில் அதிகாரமற்ற ஆட்சி நடைபெற்று வருவதைபோல் எதிர்காலத்தில் வட மாகாண சபையும் அவ்வாறானதொரு நிலைமைக்கு தள்ளப்படலாம். ஆனால் சர்வதேச சமூகத்துக்கு ஒரு செய்தி ஜனநாயக ரீதியிலான மாகாண அரசொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதேயாகும்.

எனவே அதிகாரப்பகிர்வு என்பது வடக்கு மாகாண தேர்தலுக்கு முன்னதாக நடைபெறுமானால் அது வரவேற்கதக்கதாகும். இந்த நாடு பல்லினங்கள் வாழும் நாடு என்பதை உறுதிப்படுத்தும்.

- குமார்-

## காணி மீள்பதிவு நடவழக்கை நிறுத்தப்படாது - ஜனக்க பண்டார

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதியே அப்பகுதிகளில் காணி மீள் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றோம். இதனை எக்காரணம் கொண்டும் நிறுத்த மாட்டோம் ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் விடயங்களை புரிந்துகொள்ளாமல் இந்த வேலைத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை கவலைக்குரியதாகும் என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தனது அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## சிறீலங்கா சுதந்திரக் கட்சியை இனவாத செல்வாக்கில் இருந்து மீட்டவர் சந்திரிகா

பண்டாரநாயக்கா விட்ட தவறுகளை அவர் திருத்த முயன்றவர். அவருடைய கணவர் விஜயகுமாரதுங்காவின் பாதிப்பும் அவர் மீதிருந்தது. இன்றுவரை எனக்கு அவருடன் உடன்பாடுகள் இல்லாவிட்டாலும் இந்த விடயத்தில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தகுந்தது.

தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களின் சுயமரியாதை உயர்த்தாதவரை இலங்கையின் கௌரவத்தை உயர்த்த முடியாது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் அமைச்சர் ராஜித சேனரட்ன தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சனைக்கு தீர்வு தான் எப்போ?

– தோழர் சுகு –

எமது சூரிய குடும்ப கோள் மண்டலத்துக்கு வெளியேயுள்ள கிரகங்களையும், அண்ட சராசரங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் விஞ்ஞானிகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சத்துக்கு கொண்டு வருகிறார்கள்.

சனி கிரகத்துக்கும் வியாழ கிரகத்துக்கும் உபகோள்களாக இருக்கும் சந்திரன்களில் உயிரினங்கள் வாழும் சாத்தியப்பாடுகள் பற்றி மனக்கிளர்ச்சியை தூண்டும் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தி வருகிறார்கள்.

ஆனால் எமது இந்த சிறிய தீவில் மாத்திரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இன்னும் கண்டுபிடிக்க முடியாத பூராயமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறார்களா? அல்லது அதற்கு மனமில்லாமல் இருக்கிறார்களா என்பதுதான் இங்கு முக்கியமான கேள்வியாகும்.

இந்த நாட்டில் இனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் அறுபது, எழுபது ஆண்டுகளாக நடந்து வருகின்றன. முப்பது ஆண்டுகள் பெரும் யுத்தமே நடந்து முடிந்து விட்டது. ஆனால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுதான் கண்டறியப்படவில்லை.

இது மாத்திரமல்ல மலையகத் தமிழர்கள், இஸ்லாமிய மக்கள் சிதறிய சிறுபான்மை சமூகங்களான மலாய், பறங்கி இன மக்கள் என சகல சமூகங்களுடையதுமான ஜனநாயக உரிமைகளை சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு தீர்வு எதுவும் கண்டறியப்படவில்லை.

இந்த ஆறு ஏழு தசாப்தங்களிலும் மயிர் பிளக்கும் விவாதங்கள் பல நிகழ்ந்துள்ளன. பலவிதமான தீர்வுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

சோல்பரி கமிசன் முன் 1940 களின் நடுப்பகுதியில் பெரும்பான்மை சமூகத்துக்கும் எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசிய சமூகங்களுக்குமிடையே சமத்துவமான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் பின்னர் சமஷ்டி முறையிலான தீர்வு

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னரான 13வது திருத்தச் சட்ட மூலத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள், 1990களின் நடுப்பகுதியில் சந்திரிகாவின் தீர்வு யோசனைகள், நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கைக்கு உதவிகள் வழங்கும் நாடுகளால் பரிந்துரைக்கப்பட்ட தீர்வு, அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை, நிபுணர் குழுவின் அறிக்கை என தீர்வு யோசனைகள் வரலாறு முழுவதும் சிதறிக்கிடக்கின்றன.

இவை மட்டுமா? பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், மங்கள முனசிங்கா தலைமையிலான குழுவின் பரிந்துரைகள் என ஏராளம்.

இவ்வளவு விடயங்கள் இறைந்து கிடக்கு இப்போதும் பாராளுமன்றத் தெரிவுக்குழு, அனைத்துக்கட்சிகளின் கருத்தொருமைபாடு என மோசடி தொடர்கதைகள் தொடர்கின்றன.

இந்த நாட்டின் அபிவிருத்தி சமூகங்களின் சமத்துவத்துவமான வாழ்வில், ஜனநாயகத்தில் மனித உரிமைகளில் இந்த நாட்டின் எதிர் காலத்தில் நம்பிக்கை இருக்குமானால் தீர்வு எப்போதோ காணப்பட்டிருக்கும்.

ஆனால் அதற்கு நேர்மையானதும் நெஞ்சு துணிச்சலானதுமான அனுகுமுறைகள் எதுவும் இந்த நாட்டில் கிடையாது.

இந்த நாட்டை ஆட்சி செய்துவந்த இரண்டு பிரதான கட்சிகளுமே தமது அதிகார நலன்களுக்காக பேரினவாத போதையை அகங்காரத்தை ஊட்டியும் வெளிப்படுத்தியுமே தமது அதிகாரத்தை நிலைநிறுத்தி வந்திருக்கின்றன.

1958, 1977, 1981, 1983 என இனவன்முறைகள் எதுவும் இந்த நாட்டில் தற்செயலாக நடக்கவில்லை. இந்த நாட்டின் ஆளும் வர்க்கத்தினால் திட்டமிட்டே நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

தமிழ், முஸ்லீம் விரோத கருத்துக்களை அவ்வப்போது தெரிவிப்பது சிறுபான்மைச் சமூகங்களை மலினப்படுத்துவது முப்படையினரையும் பொலிசாரையும் கொண்டு தேசிய சிறுபான்மை சமூகங்களின் மீது அடக்கு முறைகளை பிரயோகிப்பது, சிறுபான்மை தேசிய சமூகங்களின் வாழ்வையும் வளத்தையும் சூறையாடுவது, இளம் சந்ததியினரை கோபத்திற்கும், விரக்திக்குள் உள்ளாக்குவது என இக்காட்சி கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றிருக்கிறது.

கடந்து வந்த முப்பது வருட யுத்தத்தில் சர்வதேச அக்கறைக்குரிய அளவில் உயிரிழப்புக்களும் சொத்தழிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

யுத்தத்தில் தமிழர் தரப்பாக இருந்த விடுதலைப் புலிகளும் இந்தப் பேரழிவில் மறுக்க முடியாத பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள்.

இதனையே காரணமாக வைத்து தமிழர்களின் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையென்று மலினப்படுத்தும் போக்கு ஆட்சியில் உள்ளவர்களிடம் பேரினவாத அதிகாரத்து வத்திடம் காணப்படுகிறது. இது உண்மையில் ஒரு நொண்டிச்சாட்டு.

பிரச்சினையை தீர்ப்பதனால் தமது அதிகார நலன்களுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அங்கலாய்ப்பு இந்த வர்க்கத்திடம் காணப்படுகிறது. பேரின[illegible] மூலதனமாக [illegible]

இந்தப் போதையில் சாதாரண சிங்கள மக்களின் கண்களும் மறைக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் நிம்மதியான, சுயமரியாதையுடன் வாழ்வொன்று கிட்ட வேண்டுமானால் இந்த நாடு பல இனங்களின் நாடென்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு சமூகத்திற்கு மாத்திரம் சொந்தமானது என்ற பேரினவாத மமதை ஒழிக்கப்பட வேண்டும். செல்வாக்கிழந்து போக வேண்டும்.

தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளும் அனுபவங்களும் வரலாறு முழுவதும் இறைந்து கிடக்கின்றன. இவற்றில் மிகச் சிறந்தவற்றை நடைமுறையாக்க வேண்டும்.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும். ஒற்றையாட்சி என்ற பதம் நீக்கப்படல் வேண்டும். ஒரு சமஷ்டி குடியரசாக இலங்கை மாற வேண்டும்.

பேரழிவுகளின் பின்னரும் தமிழ் பேசும் மக்கள் பிச்சைகாரர்கள் போல் வாழ முடியாது. இரந்து பெறுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில் இவை உரிமைகள்.

காணி, பொலிஸ் நிதி, நீதி அதிகாரம் என்பன தமிழ் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். மலையக தமிழ் மக்கள், முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப அந்த மக்களுக்குரிய கட்டமைப்புக்களும் உருவாக்கப்படல் வேண்டும்.

இதற்காக சிங்கள மக்கள் மத்தியில் இலங்கையை ஜனநாயக மயப்படுத்தலில் அதிகாரங்களை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் அக்கறை கொண்ட சமூக அரசியல் சக்திகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

சர்வதேச அளவிலும் இந்திய அளவிலும் இலங்கையின் இனப்பிரச்சினையில் உள்ள அக்கறைகள் சரியான முறையில் பிரயோசப்படுத்தப்படல் வேண்டும்.

கோரிக்கைகள் யதார்த்தமானவையாகவும் அர்த்தமற்ற பயங்களை எந்த சமூக மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தாத விதத்திலும்,

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பொறுப்புள்ள தலைமைகளும், மலையக தமிழ் மக்கள், முஸ்லீம் மக்களின் தலைமைகளும் சிங்கள முற்போக்கு சமூக ஜனநாயக அரசியல் சக்திகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

சமூக அக்கறை கொண்ட அனைத்துப் பிரிவினரையும் இயலுமானவரையில் இணைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

இந்த வழியிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். வேறு குறுக்கு வழிகளில் அல்ல. ஏற்கனவே பலதடவை இதனை சொல்லியிருந்தாலும் இன்னும் பல நூறு தடவை இதனை வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

பிரபஞ்சத்தின் இரகசியங்களை கண்டறிவதிலேயே மனிதர்கள் கேவலம் தாம் வாழும் சிறிய இடப்பிரதேசத்தில் சகவாழ்வு வாழ்வதற்கான வழியை கண்டுபிடிக்காத இந்த அவக்கேட்டிலிருந்து முதலில் விடுபட வேண்டியிருக்கிறது. ●

## வன்னி மாவட்ட பாடசாலைகளை புனரமைக்க இந்தியா 187 மில்லியன் ரூபா

வட மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த 79 பாடசாலைகளை குறித்த ஒன்பது மாதங்களுக்குள் புனர்நிர்மாணம் செய்வதற்காக இந்தியா 187 மில்லியன் ரூபாயை வழங்க முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தந்தத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா - பசில் ராஜபக்ஷ கைச்சாத்திட்டனர்.

இதன்மூலம் 42 ஆயிரம் மாணவர்களும், 2,400 ஆசிரியர்களும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏன் இந்தப் பாரபட்சம்

திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் கடந்த மாதம் உவர்மலை பொது வாசிகசாலையில் நடமாடும் சேவையொன்று நடத்தப்பட்டது. ஆதனவரி வசூல் செய்யப்பட்டது. ஆதனவரி செலுத்துபவராயினும் சரி குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த அனைவருக்கும் ஆதனவரி சம்பந்தமான இறுதி அறிவித்தல் நகரசபையால் எழுத்துமூலமாக விடுக்கப்பட்டுள்ளது.

எதுவித முன்னறிவித்தல் இல்லாத இந்த வேண்டுகோளால் மக்கள் விசனமடைந்துள்ளனர். தமிழர்கள் அதிகமாக வாழும் வட்டாரத்தில் மாத்திரம் இது விடுக்கப்பட்டுள்ளது. புகையிரத நிலையம் தொடக்கம் 10ம் வட்டாரம் முடியும் வரை நடமாடும் சேவைகள் நடத்தப்படுவதில்லை, ஆதனவரியும் அறவிடப்படுவதில்லை என மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

நகரசபை தனது பணிகளை மேற்கொள்வதற்கு நிதி வேண்டும் என்பது மக்களுக்குத் தெரியும் ஆனால் பாரபட்சம் பாராமல் நகரபகுதி அனைத்துக்கும் நகரசபை தனது கடமையை செய்ய வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தகவல் : சத்தியன், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம்

- புளியங்குடி பூலியன் -



பாலஸ்தீனத்தில் உள்ளவர்கள் எல்லாம் தாடி வைத்த, துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகள் என்கிற கருத்துதான் உலகம் முழுவதும் விதைக்கப்பட்டிருக்கிறது. ஹமாஸையும், ஹிஸ்புல்லாவையும் காட்டி, இவர்களுக்கு ஆட்சிசெய்யும் அளவுக்குப் பக்குவம் போதாது என்கிறது மேற்கத்திய அரசியல், ஆயுத ஆதரவுடன் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இஸ்ரேல்.

1967-ம் ஆண்டுக்கு முந்தைய எல்லைகளுடன் தங்களது நாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் பாலஸ்தீனத்தின் முக்கியக் கோரிக்கை. அல்-அக்சா மசூதி இருக்கும் கிழக்கு ஜெருசலேமைத் தங்களிடமே தந்துவிட வேண்டும் என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

இதுபோக, மேற்குக் கரையில் இஸ்ரேலியக் குடியேற்றங்களை காலி செய்வது, போரால் வெளியேறிய அகதிகளுக்குக் குடியுரிமை வழங்குவது என பல பிரச்சனைகள் பாலஸ்தீன அங்கீகாரத்தில் அடங்கியிருக்கின்றன. யாசர் அராபத் காலத்தில் தன்னிச்சையான விடுதலை அறிவிப்பு வெளியிட்ட பிறகுதான் இந்தப் பிரச்சனை சூடு பிடித்தது. இன்றைய கணக்குப்படி இந்தியா உள்பட 126 நாடுகள் பாலஸ்தீனத்தின் இறையாண்மையை அங்கீகரித்திருக்கின்றன.

ஆனாலும் மேற்குக்கரை எல்லைக்குள் கட்டுமானப் பணிகள் நடத்துவதையும், ஜெருசலேம் முழுவதையும் ஆக்கிரமிக்க முயல்வதையும் இஸ்ரேல் நிறுத்திக் கொள்ளவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன் போன்ற மேற்கத்திய நாடுகள், பாலஸ்தீனத்துடன் அரசுமுறை உறவுகள் வைத்துக் கொண்டிருந்தாலும், அதன் இறையாண்மையை இதுவரை அங்கீகரிக்கவில்லை என்பதுதான் இஸ்ரேலின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்குக் காரணம்.

ஒபாமா அமெரிக்க அதிபரான பிறகு இஸ்ரேலுக்கு ஆயுத சப்ளை வெகுவாகக் குறைக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இஸ்ரேலியத் தலைவர்களும் பாலஸ்தீனத் தலைவர்களும் நியூயார்க்கில் நேரடியாகச் சந்தித்துக் கொண்டனர். இந்தப் பிரச்னைக்கு ஓராண்டுக்குள் அரசியல் ரீதியான தீர்வு காணப்படும் என்று அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய கூட்டமைப்பு போன்றவை உறுதியளித்திருந்தன.

இந்த மாதத்துடன் மேற்கத்திய நாடுகள் தந்த உறுதிமொழிக்கான கெடு முடிகிறது. இனியும் மேற்கத்திய நாடுகளை நம்பிப் பயனில்லை என்று புரிந்துகொண்டதாலோ என்னவோ, முகமது அப்பாஸ் தலைமையிலான பாலஸ்தீன அரசு அடுத்த ஆயுதத்தைக் கையிலெடுத்திருக்கிறது. 1988-ல் தன்னிச்சையான விடுதலை அறிவிப்பை வெளியிட்டதுபோல, இப்போது ஐ.நா.விடம் அங்கீகாரம் கோரப் போவதாக பாலஸ்தீனம் அறிவித்திருக்கிறது.

என்னதான் உலகில் பெரும்பான்மை நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்திருந்தாலும் ஐ.நா.வில் அதற்கு இதுவரை அங்கீகாரம் கிடைக்காததால் எல்லை வரையறுப்பது, ராணுவம் அமைப்பது, ஆயுதங்களைக் கொள்முதல் செய்வது, சர்வதேச நீதிமன்றங்களில் முறையிடுவது போன்றவற்றில் சிக்கல்கள் இருக்கின்றன. பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பிஎல்ஓ) வடிவில்தான் ஐ.நா.வில் பாலஸ்தீனத்துக்கு இப்போது பிரநிதித்துவம் இருக்கிறது. இதற்குப் பதிலாக ஒரு நாடு என்கிற அந்தஸ்து தங்களுக்கு வழங்க வேண்டும் என்று பாலஸ்தீனம் கோரப் போகிறது. வரும் 21-ம் தேதி பொதுச்சபை கூடும்போது இந்த விவகாரத்தை எழுப்ப பாலஸ்தீனம் முடிவு செய்திருக்கிறது. இருந்தா லும் எந்த மாதிரியான உத்தியை பாலஸ்தீனம் முன்னெடுக்கப் போகிறது என்பது இதுவரை வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.



வழக்கமாக இதுபோன்ற அங்கீகாரம் கோரும் விண்ணப்பங்கள் நேரடியாகப் பாதுகாப்பு அவைக்கு அனுப்பப்படும். பின்னர் இது தொடர்பாக ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்படும். என்றாலும், எந்த முடிவு எடுக்கப்பட்டாலும் அதற்கு 15 உறுப்பு நாடுகளில் குறைந்தது 9 நாடுகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும். இப்படியொரு வாக்கெடுப்பு நடந்தால், அதை எதிர்த்து ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்துவோம் என்று அமெரிக்கா ஏற்கெனவே அறிவித்துவிட்டது.

அதேநேரத்தில் பொதுச் சபையில் நேரடியாக வாக்கெடுப்பு நடத்தும்படி தீர்மானம் கொண்டு வரப்பட்டால், பாலஸ்தீனத்துக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் என்று கருதப்படுகிறது. 193 உறுப்பு நாடுகளில் 122 நாடுகள் பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு ஆதரவளிக்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால், தங்களால் 150-க்கும் மேற்பட்ட நாடுகளின் ஆதரவைப் பெற முடியும் என்று பாலஸ்தீனம் கூறி வருகிறது. ஒருவேளை அதுபோல், 3-ல் 2 பங்கு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய தார்மிக நிர்பந்தம் பாதுகாப்பு அவைக்கு ஏற்படும்.

அங்கீகாரக் கோரிக்கை ஐ.நா.வில் விவாதிக்கப்படுவதே மேலை நாடுகளுக்கு கடும நெருக்கடியை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பல்வேறு உண்மைகள் இந்த விவாதங்களின் மூலம் வெளிவரும் என்பதால் இப்படியொரு விவாதம் நடைபெறுவதையே தடுத்துவிட முயற்சிகள் நடந்து வருகின்றன.

பெரும்பான்மையான நாடுகள் பாலஸ்தீனத்தின் பக்கம் நிற்கும்போது, அவற்றை எதிர்த்து நிற்க வேண்டிய தர்மசங்கடமான நிலை அமெரிக்காவுக்கு ஏற்படும். எதிர்பார்க்காத இடங்களில் இருந்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவு வந்தால், அது அமெரிக்காவின் உலகளாவிய செல்வாக்கைத் தகர்த்துவிடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மேலை நாடுகளின் செல்லப் பிள்ளையாக இருந்துவரும் இஸ்ரேல் தனிமைப்படுத்தப்படும். அந்த வகையில் அங்கீகாரம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் பாலஸ்தீனத்துக்கு வெற்றி என்பதுதான் உண்மை.

சுற்றியுள்ள எல்லா நாடுகளிலும் மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, எதுவுமே நடக்காததுபோல பழைய பல்லவியையே தொடர்ந்து பாடிக்கொண்டிருப்பதை சொந்த மக்களேகூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இஸ்ரேலும் புரிந்துகொள்ள வேண்டும்.

44 ஆண்டுகளாக பாதுகாப்பு அச்சுறுத்தலுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கும் இரு பிரிவு மக்களுக்கும் அதுதான் நன்மையைத் தரும். அமெரிக்காவும், பிரிட்டனும் இஸ்ரேலுக்கு உண்மையான நட்பு நாடுகளாக இருந்தால், இதையேதான் வலியுறுத்த வேண்டும். எல்லா நாடுகளின் ஒத்துழைப்புடன் பாலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் அங்கீகாரம் கிடைக்கட்டும். மத்திய கிழக்குப் புரட்சி முழுமையடையட்டும்.

நன்றி : தினமணி

# இலங்கை பல்லினங்களின் நாடாக மாறாதவரை
## அபிவிருத்தியோ, சமூக நல்லுறவையோ ஏற்படுத்த முடியாது

இன்று வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வில் நிகழும் சொல்லொணா வேதனைகள் சவால்கள் இழப்புக்கள் என்பவற்றை எதிர்கொள்வதற்குஸ என்ன வழி என்பது இன்று எம் முன்னுள்ள முக்கிய கேள்வியாகும்.

இன்று அனுபவிப்பது போன்ற துன்பங்களை விடவும் மோசமான துன்பங்களை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் அனுபவித்திருக்கிறார்கள்.

பழைய யாழ் சந்தை, யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டதிலிருந்து இன்றைய நில அபகரிப்பு மக்களின் அன்றாட வாழ்வில் இராணுவத் தலையீடு, கிரீஸ் பூதம் வரையிலான பிரச்சினைகளை அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதானால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களும் நிலத்தின் மீதான அதிகாரங்களும், நீதித்துறை அதிகாரங்களும் கொண்ட அதிகாரப்பகிர்வு கட்டமைப்பு அவசியம். மாநில மட்டத்திலான அரச கட்டமைப்பிற்குள் இது அடங்க வேண்டும்.

மத்திய அரசுக்கு கட்டுப்பட்ட பொலிஸ் என்பது எப்போதும் பேரினவாத மேலாதிக்க மனோபாவத்துடனேயே நடந்து வந்திருக்கிறது. இதுவே பல சந்தர்ப்பங்களில் பிரச்சனைகள் தலைதூக்குவதற்கு காரணமாக இருந்திருக்கிறது.

திரும்பவும் மக்கள் மீதான ஆத்திரமூட்டல் சம்பவங்களில் ஈடுபடுவது அதிகரித்துவருகிறது. இத்தகைய போக்குகள் சமூகத்தை மேலும் மேலும் விரக்திக்கும், கோபத்திற்கு இட்டுச் செல்லவும் இதேபோல் வடக்கு கிழக்கில் நிலங்கள் அவற்றின் பயன்பாட்டு அதிகாரம் மாகாணத்துக்குரியதாக அமைய வேண்டும்.

தற்போது வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிப்பதிவுகள் மக்கள் மத்தியில் பல்வேறுவிதமான சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

இடம்பெயர்ந்து இலங்கையிலும் இந்தியாவிலும் அகதிகளாக வாழ்பவர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்புவதற்கான இயல்பு நிலை ஏற்படுத்தாத வரையில், அச்சநிலை முழுதாக நீங்காத நிலையில், அவசர அவசரமாக இத்தகைய காணிப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவது சொந்த ஊரிலேயே தம்மை சிறுபான்மையினராக ஆக்குவதற்காகவா என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.

சட்டம் ஒழுங்கு, காணி, நிதி,நீதி அதிகாரங்களை கொண்ட அதிகார கட்டமைப்பின் அவசியம் வடக்கு கிழக்கில் வரலாற்றின் தேவையாக அமைகிறது.

தவிர வடக்கின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கே சனத்தொகை கணக்கெடுப்பு உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 30 வருடங்களில் மக்கள் புலம் பெயர்ந்து போனது அவர்களில் பெருந்தொகையானோர் திரும்பிவராத சூழ்நிலையில் பிரதிநிதித்துவ குறைக்கப்பட்டுள்ளது. இன்னொரு விதமாக பார்ப்போமானால் ஒரு சமூகத்தின் பேரழிவு அந்த சமூகத்திற்குரிய பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கான நியாயமாக்கப்பட்டிருக்கிறது.

யுத்தம் முடிவிற்கு வந்து சமூகங்களிடையே புரிந்துணர்வு சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது அந்த அழிவுக்கு உட்பட்ட சமூகத்தை மீளெழுச்சி கொள்ள வைப்பதும், அச் சமூகத்திற்குள்ள சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதும் ஆகும்.

ஐ.நா. சபைக்கும் அண்டை நாட்டுக்கும் அரசாங்கம் மீள் குடியேற்றம் சமூகங்களிடையே புரிந்துணர்வு அபிவிருத்திப்பற்றி கூறி வருகின்றது.

வடக்கு கிழக்கில் நில ஆக்கிரமிப்புக்களும் இராணுவமயமாக்கலும், நாடாளுமன்ற பிரதிநிதித்துவ குறைப்பும், கிரீஸ் பூதங்களும், காணிப்பதிவுகளும் சமூகங்களிடையே புரிந்துணர்வுக்கு மாறாக பேரினவாத அந்நதையை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றன. உண்மைகள் துருத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உலகளவிலும், பிராந்தியளவிலும் பேசப்படுகிறது. நிலம்,பொலிஸ், நிதி, நீதி அதிகாரங்களை வென்றெடுப்பதிலேயே தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு பாதுகாப்பான நிலையை ஏற்படுத்த முடியும். சிங்கள தலைவர்களுடன் மாத்திரமல்லாமல் முஸ்லீம், மலையக தலைவர்களுடனும் இவைபற்றி பேசப்பட வேண்டும்.

பல்லினங்களின் நாடாக இலங்கை மாற்றப்படுவதிலேயே உண்மையான புரிந்துணர்வு. சமூக, பொருளாதார அபிவிருத்தியும் ஏற்பட முடியும்.

# சமகால உலகளாவிய எழுச்சிகள்

மத்திய கிழக்கில் ஜனநாயக ஆட்சிக்கான புரட்சிகர எழுச்சிகள் நிகழ்கின்றன என்பது உண்மை. ஆனால் அவற்றை மேற்குலகமும் வட அமெரிக்காவும் தமது அரசியல் பொருளாதார நலன்களுக்காக திசை திருப்புவதே இங்கு பிரச்சினைக்குரிய விடயம்.

ஏகிப்தில் தஹ்ரீர் சதுக்கத்தில் இரவு பகலாக மக்கள் நடத்திய எழுச்சிகள் கொஸ்னி முபராக்கை பதவியிலிருந்து அகற்றியதே தவிர ஆட்சியில் இராணுவத்தின் கிடுக்கிப் பிடியே நிலவுகிறது.

அண்மையில் எகிப்திய எழுச்சியை மலினப்படுத்தும் விதமாக மத கலவரங்கள் வெடித்தன.

அங்கு ஜனநாயக ஆட்சி தோன்றும்வரை இடையறாது எழுச்சிகள் தேவைப்படுகின்றன.

மியன்மாரில் மக்களின் விருப்பமான ஜனநாயக ஆட்சி இன்னும் அங்கு மலரவில்லை. ஆங் சாங் சுகி அவர்களின் தலைமையில் மியன்மாரில் ஆட்சி அமையும் போதே ஜனநாயகத்திற்கான முதல் அடிவைப்பு நிகழும். அங்கும் மாற்றத்திற்கான எழுச்சிகள் அவசியப்படுகின்றன.

இதற்கிடையே அமெரிக்காவின் வால் தெரு தொடக்கம் கிரேக்கத்தின் ஏதன்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் உலகளாவிய பொருளாதார சமூக அநீதிகளுக்கு மூலகாரணமாக விளங்கும் காப்ரேட்டுக்களின் ஈவிரக்கமற்ற எதிராக எழுச்சிகள் ஆர்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த எழுச்சிகளில் வேலை வாய்ப்பு கல்வி, சமூக பாதுகாப்பு சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றில் அக்கறை செலுத்தப்பட்டுள்ளது.

உலக மக்கள் அது மேற்காயினும் சரி கிழக்காயினும் சரி ஜனநாயகத்தையும் பொருளாதார சமத்துவத்தையும் அதாவது மனித முகம் கொண்ட பொருளாதார கட்டமைப்பையும் வலியுறுத்தி இயக்கங்கள் நடத்துகிறார்கள்.

அநீதியான ஆட்சி முறைகளும் பொருளாதார கட்டமைப்புக்களும் தகர வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

இதுவரை கால வரலாறுகள் யாவும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

# பாதாளக் குழுக்கள் அரசியலுக்கு வந்தால் இதுதான் நடக்கும் - டியூ

பாதாளக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அரசியலுக்கு வந்தால், நாட்டில் இவ்வாறான கொடூரச் சம்பவங்களே அரங்கேறும் என சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார். முல்லேரியா பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ஜனாதிபதியின் ஆலோசகரும், தொழிற் சங்கப் பணிப்பாளரும், முன்னாள் அமைச்சருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட மூவர் பலியாகினர். இந்தச் சம்பவத்தில் கொழும்பு மாவட்ட ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்தசில்வா உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும், மனிதனும் இன்புற்றிருக்க நாம் என்ன செய்ய வேண்டும் ?

பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் டாக்டர் நரேந்திரன் போன்றவர்களின் சில கட்டுரைகள் வடக்கின் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் இன்றைய வாழ்வியல் மனோபாவங்கள், அபிவிருத்தி வளங்கள் பாதுகாப்பு பற்றி சமூக, பொருளாதார அக்கறையுடனான கட்டுரைகள் தேனீயில் அவ்வப்போது இடம்பெற்றிருக்கின்றன.

மனிதர்களுக்கிடையிலான உறவுகள், உழைப்பின் மீது நம்பிக்கையீனம், சமூகச் சீர்கேடுகள் பற்றியும் சிறப்பான வாழ்க்கையை அமைப்பதற்கான வாய்ப்புக்களை யாழ்ப்பாணம் கொண்டிருப்பது பற்றியும் நரேந்திரன் எழுதிய அருமையான கட்டுரை ஒன்றை வாசிக்கமுடிந்தது.

திரு சிவச்சந்திரன் வீதி அபிவிருத்தியும், சட்டம் ஒழுங்கு பேணப்படாமையும் விரயமும் தாறுமாறான மின்சாரக் கட்டமைப்பும் அடிக்கடி செயலிழந்து போவது வரலாற்றுச் சின்னங்கள் அழிந்து போவது பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தின் நில, நீர் வளம் பற்றிய கட்டுரைகளையும் அவ்வப்போது எழுதி வந்துள்ளார்.

இவை எனக்கு மிகவும் பிடித்தமான பத்திகளாக இருந்திருக்கின்றன.

பல்வேறு தளங்களிலும் பிரச்சனைகள் இருக்கின்றன

யாழ்ப்பாணத்தில் மினி பஸ்ஸில் (தனியார் போக்குவரத்து) பிரயாணம் செய்பவர்கள் அனுபவிக்கும் அவஸ்தைகள் அதிர்ச்சியளிப்பவை.

பரவலாகவே நடத்துனர்கள் பின்னால் போ. தள்ளிப்போ, நிமிர்ந்துநில், வளைந்து நில் என்று ஈவிரக்கமற்று ஆட்களை அடைவார்கள்.

அன்பான வார்த்தைகளுக்கு அங்கு இடமில்லை. குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், பெண்கள் என பல தரப்பினரும் இந்த மினி பஸ்களில் பிதுங்கிய படி பயணம் செய்ய வேண்டும். மானிட ஜென்மங்களுக்கான எந்த மதிப்பும் இல்லை.

மிளகாய், அரிசி சாக்குகளை தூக்கி, தூக்கி அடைவதுபோல் அடைவார்கள். ஆனால் பயணிகளிடமிருந்து எந்த எதிர்ப்புக் குரல்களும் எழுவதில்லை. எல்லாம் மரத்துப் போய்விட்டது.

யாழ்ப்பாணத்தினுள் ஐந்து கிலோ மீற்றர் ஆட்டோவில் பிரயாணம் செய்வதானால் ஐநூறு ரூபாய் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் நகரிலிருந்து வடமராட்சி செல்வதானால் இரண்டாயிரம் ரூபாய் செலுத்த வேண்டும்.

தவிர ஆஸ்பத்திரி ஆயினும் செயலகம் ஆயினும் அங்கு சாதாரண மனிதர்களுக்கு எந்த முகமும் கிடையாது. அன்பான வார்த்தைகள், இன்முகம் என்பன அருகிப்போயின.

சேவை என்பதைவிட சாதாரண மனிதர்கள் தங்களை தொந்தரவு செய்கிறார்கள் என்ற மனோபாவமே காணப்படுகிறது. இத்தனைக்கும் சாதாரண மக்களின் வரிப்பணத்திலேயே இவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

பொலிஸ் நிலையம், நீதித்துறை என்பனவும் அவ்வாறுதான்.

ஒரு சமூக பாதுகாப்பு நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. வாழ்க்கை மிகவும் கெடுபிடியானதாக மாறிவிட்டது.

இயக்கங்களில் இருந்தவர்கள் புலிகள் உட்பட கேவலமானவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் கருதப்படுகிறார்கள். அவர்கள் சமூகத்தில் இணைந்து கொள்வதில் சிரமங்கள் இருக்கின்றன. பெண்பிள்ளைகளாக இருந்தால் அது மிகவும் அவலமானது.

கடந்துவந்த முப்பது வருடங்களில் தமது வாழ்வை துறந்தவர்கள் இளமை காலத்தை தொலைத்தவர்கள் தோல்வியடைந்தவர்களாகவும் வக்கில்லாதவர்களாகவும் கருதப்படுகிறார்கள்..

ஆனால் இக்காலகட்டத்தில் நெற்றியில் பட்டையும் சந்தனமுமாக தமது கல்வியை, தொழில் வாய்ப்பை பெற்றவர்கள் அந்தஸ்த்தில் உள்ளவர்கள் இந்த இயக்கங்களில் இருந்தவர்களால்த்தான் சமூகத்துக்கு பிரச்சினை என்கிறார்கள். இவர்கள் நீதிவான்களாகவும் சட்டத்தரணிகளாகவும் ஏனைய அரச அதிகாரிகளாகவும் இருக்கலாம். பொலிசும் அவ்வாறு தான்.

எமது சமூகத்தில் நிலவும் முரண்நிலை என்னவென்றால் ஒருபக்கம் இந்த மேட்டுக்குடி மனோபவம் கொண்டவர்கள் கடுமையான தேசியவாதம் எண்ணம் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள்.

மறுபுறம் மத்திய அரசாங்கத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரங்களை அகங்காரத்துடன் பிரயோகிப்பார்கள்.

சமூகத்தில் விடுதலை என்று தவறாகவோ சரியாகவோ வழிநடத்தப்பட்டவர்களுக்கு, சாதாரண குடும்பங்களின் பிள்ளைகளுக்கு எந்த மதிப்பும் கிடையாது.

தமது அதிகாரத்துக்காக கூழைகும்பிடு போடுவதும் மறுபுறம் கடுமையான தேசியவாத நிலைப்பாட்டை மேற்கொள்வதும் என்ற போலித்தனம் இவர்களிடம் காணப்படுகிறது.

இயக்கங்களில் இருந்தவர்கள் கேள்விக்குட்படுத்த முடியாத புனிதர்கள் அல்ல. தனிப்பட்ட நலன்களுக்காகவும் இணைந்திருக்கலாம். மனித உரிமைகள், ஜனநாயகம் பற்றிய உணர்வுகள் ஆயுதங்கள் கோலோச்சிய நிலையில் நசித்து அழிந்திருக்கலாம். இந்த வன்முறை மனோபாவமே இன்றைய சமூகத்தின் கெடுபிடியான தன்மைக்கு காரணமாக இருக்கலாம். ஆனால் பெருவாரியான இளைஞர்களும் யுவதிகளும் அப்பளுக்கற்ற எண்ணங்களுடன்தான் போராட புறப்பட்டவர்கள்.

ஆனால் இந்தப் போராட்டத்துக்குரிய சித்தாங்களை உருவாக்கிய, போதையூட்டிய கனவான்கள் தான் கறைபடியாத கையினர் என்று கூறிக்கொள்ளலாம். ஆனால் உண்மை அதுவல்ல.

சமூகத்தில் விளிம்புநிலையில் உள்ளவர்கள் இன்று முகமற்றவர்களாகத்தான் வாழ்கிறார்கள்.

ஏனோ தவிர்க்கமுடியாமல் நீதிமன்றம், ஆயுதப்படை, சிறைச்சாலை என்பனவெல்லாம் ஆளும் வர்க்கத்தின் கைக்கருவிகளே என்ற கார்ல் மார்க்ஸின் வார்த்தைகள் அடிக்கடி மனதில் தோன்றி மறைகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் மார்க்ஸ்ஸும் ஏங்கல்ஸ்ஸும் குறிப்பிட்ட வார்த்தைகள் ஞாபகத்துக்கு வருகின்றன. முதலாளித்துவம் கவிஞனையும், விஞ்ஞானியையும், எழுத்தாளனையும் இன்ன பிறரையும் தனது கூலி அடிமையாக்கியுள்ளது என்ற வார்த்தைகள் இன்றளவும் உண்மையாகத்தான் உள்ளது.

பங்கு மார்க்கெட் வியாபாரிகளும், புலம் பெயர்ந்து சென்ற நாடுகளில் வெற்றிகரமாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்களுடைய குடும்பங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஜாம்பவான்களும் வசதியான வாழ்க்கை ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

யுத்தத்தில் உற்ற சுற்றத்தை இழந்த குடும்பங்கள் இந்த பாழாய்போன இயக்கங்களுக்கு போன இளைஞர்களும், யுவதிகளும் நடைப்பிணங்களான வாழ்க்கையொன்றை அனுபவிக்கிறார்கள்.

விதவைகள், ஊனமுற்றோர், அநாதைகளானோர் இந்த சமூக அமைப்பினால் வஞ்சிக்கப்பட்டோரென ஒரு பெரும் பட்டாளமே இருக்கிறது.

மக்களுக்கு கிடைக்க வேண்டிய அரச வரப்பிரசாதங்கள் கூட கிராம மட்டத்திலுள்ள கீழ்நிலை அதிகார வர்க்கத்திலிருந்து மேல் நிலை வரை தமக்கும் தமக்குத் தெரிந்தவர்களுக்குமிடையே பங்கு போட்டுக்கொள்ளும் நிலைதான் காணப்படுகிறது.

பெரும் யுத்தகாலத்தில் எந்த சமூக அக்கறையுமின்றி சுரணையற்று வாழ்ந்தவர்கள் சிவநெறிச் செம்மல்களாகவும், கனவான்களாகவும் சமூகத்தில் உலா வருகிறார்கள். மணிவிழாக்கள் வேறு.

புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து வரும் பணத்தை தண்ணீராய் செலவழித்து உழைப்பின் மகிமை தெரியாத ஒரு சுகவாசிக் கூட்டம் உருவாகியது.

இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதும் எங்கெங்கு காணினும் சாரயக் கடைகளும், இரவு விடுதிகளும், பெண்கள் மீதான வன்முறைகள் மக்கள் விரோத செயல்களை அதிகரித்துள்ளன.

கிரீஸ் பூதம் தொடக்கம் காணிப்பதிவு வரை மக்கள் மத்தியில் பீதியும் சந்தேகமும் வலுவடைந்து வருகிறது.

**தி. சிறிதரன்**

விரக்தியடைந்த, இல்லாதவர்கள் என்ற மனிதப் பட்டாளம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகள் முதலாளித்துவ நாடுகளாக இருந்தாலும் நேர்த்தியான உள்ளக கட்டமைப்பு கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் சமூக பாதுகாப்பு என்பன அங்கு காணப்படுகின்றது. ஸ்கன்டிநேவிய நாடுகளில் மிக அதிகமாகவே காணப்படுகின்றது.

எமது சமூகத்தில் தெரியும் இந்த குணங்குறிகள் இந்த சமூகத்தை பிடித்த நோயின் அறிகுறிகளாகும்.

ஒரு பண்பாட்டு எழுச்சியொன்று தேவைப்படுகிறது. சுரண்டல், தீண்டாமை, பால் ரீதியான ஒடுக்குமுறை இவை எல்லாவற்றையும் ஒழித்த மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் ஒரு உயரிய கலாச்சார சூழல் தேவைப்படுகிறது.

ஐரோப்பாவில் முன் பின் அறிமுகம் இல்லாதவர்களுடன்கூட வீதியில் புன்னகைத்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அலுவலகங்களில், வங்கிகளில், பாடசாலையில் அரச நிர்வாக கட்டமைப்புக்களில் ஒரு இங்கிதம் இருக்கிறது.

எமது முகங்கள் இறுகிப்போய் கிடக்கின்றன. எமது வார்த்தைகள் மிகவும் உஷ்ணமானவையாக இருக்கின்றன.

எமது வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும். மனித உரிமைகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். எமது சுற்றாடல் ஈவிரக்கமற்று அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வாழ தகுதியற்றதாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

யாழ்ப்பாணம் கச்சேரி பழைய பூங்காவிலிருந்து வட திசை நோக்கி ஆயிரக்கணக்கான வௌவால்கள் மாலை நேரங்களில் பறந்து செல்லும். கொடிய யுத்தகாலத்தில் கூட வௌவால்கள் அவ்வாறு பறந்து செல்லும்.

இப்போதெல்லாம் வௌவால்கள் வடதிசை நோக்கி பறக்கும் செக்கலான அந்த மாலைப் பொழுதுகளை இழந்து விட்டோம். பல மானிட நெஞ்சங்களையும் இழந்து விட்டோம்.

இயற்கை அழிக்கபட்டு வருவதன் குறியீடே இது.

எமது வாழ்க்கையும் அப்படித்தான்.

இயற்கையும், மனிதனும் இன்புற்றிருக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்று தீவிரமாக சிந்திக்க வேண்டிய நேரமிது. ●

# சமாதானத்துக்கான நொபெல் பரிசு



இவ்வாண்டின் சமாதானத்துக்கான நொபெல் பரிசு பெண்ணுரிமைகளுக்காகப் பங்காற்றியிருந்த மூன்று பெண்களுக்கு கூட்டாக அளிக்கப்படுகிறது.

லைபீரியாவின் அதிபர் எல்லென் ஜான்சன் சர்லீ·ப், லைபீரியாவின் சமாதான ஆர்வலர் லெய்மா க்போவீ, மற்றும் யெமென் நாட்டின் ஜனநாயக ஆர்வலர் தவக்குல் கார்மான் ஆகியோர் பரிசைப் பெறுகின்றனர்.

பெண்களின் பாதுகாப்புக்காகவும், பெண்களின் உரிமைகளுக்காகவும், சமாதான முன்னெடுப்புகளிலும் இந்தப் பெண்மணிகள் அமைதி வழியில் முன்னெடுத்த போராட்டங்களை அங்கீகரித்து இவர்களுக்கு நொபெல் அமைதிப் பரிசு வழங்கப்படுவதாக நொபெல் தேர்வுக் குழு தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு சம உரிமை கிடைக்காத வரை எந்த ஒரு முன்னேற்றமும் முழுமையடையாது என்று நொபெல் தேர்வுக் குழுவின் தலைவர் தொர்ப்யான் யாக்லண்ட் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தின் எல்லா மட்டத்திலும் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதில் ஆண்களுக்கு சமமாக பெண்களுக்குக்கும் வாய்ப்புகள் கிடைக்கும்போதுதான் உலகத்தில் ஜனநாயகத்தையும் நீடித்த சமாதானத்தையும் நிலைநாட்ட முடியும் என்று அவர் கூறினார்.

நொபெல் பரிசுக்காக வழங்கப்படும் 15 லட்சம் டாலர்கள் இவர்கள் மூவருக்கும் பகிர்ந்தளிக்கப் படும் எனத் தெரிகிறது.

நொபெல் பரிசுக் குழுவின் தேர்வை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச பொதுமன்னிப்பு சபை பாராட்டியுள்ளது.

## சர்லீ·ப்

ஆப்பிரிக்க கண்டத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டின் ஆட்சித் தலைவரான முதல் பெண்மணி என்றால் அது திருமதி எல்லென் ஜான்சன் சர்லீ·ப்தான்.

14 ஆண்டு காலம் நடந்த லைபீரியாவின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 2005ல் சர்லீ·ப் அம்மையார் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

யுத்தத்தால் பொருளாதார ரீதியில் சிதிலமடைந்தும், ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறியும் இருந்த லைபீரியாவை மீளக் கட்டியெழுப்புவதில் சர்லீ·ப் அம்மையார் பெரும்பங்கு ஆற்றினார்.

## லெய்மா க்போவீ

பரிசு பெறும் மற்றொரு லைபீரியப் பெண்ணான லெய்மா க்போவீ அந்நாட்டில் உள்நாட்டு யுத்தம் நடந்தபோது பெண்களை ஒன்றுதிரட்டி வன்முறைக்கு எதிராக குரல்கொடுத்தவர்.

கணவன்மார் வன்முறைப் பாதையில் செல்லாமல் தடுக்க மனைவிமார் 'தாம்பத்திய வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் நூதன போராட்டத்தைச் செய்ய வழிவகுத்தவர் இவர்.

பல்வேறு இன மதப் பின்னணி கொண்ட பெண்களையும் இவர் போராட்டங்கள் வழியாக ஒன்றுதிரட்டியிருந்தார். பெண்கள் அரசியலில் ஆர்வமாகப் பங்கேற்பதையும் தேர்தல்களில் போட்டியிடுவதையும் இவர் ஊக்குவித்தார்.

மேற்கு ஆப்பிரிக்காவில் யுத்த காலத்திலும் சரி யுத்தத்தின் பின்னரும் சரி பெண்களின் செல்வாக்கு மேலோங்கப் பணியாற்றியவர் என்று நொபெல் விருதுக் குழு இவரைப் பாராட்டியுள்ளது.

## கார்மான்

இவ்வருடத்தின் நொபெல் அமைதிப் பரிசை வெல்லும் மூன்றாவதுப் பெண் யெமெனைச் சேர்ந்த தவகுல் கார்மான் ஆவார்.

நொபெல் அமைதிப் பரிசின் சரித்திரத்தில் அதனைப் பெறும் முதல் அரபுப் பெண்மணி இவர்தான்.

அந்நாட்டில் தடைகளற்ற பெண் ஊடகவியலாளர்கள் என்ற அமைப்பை நடத்திவருகின்ற கார்மான், ஊடகச் சுதந்திரத்துக்கு ஆதரவான தமது போராட்டங்களுக்காகவும், அந்நாட்டின் நெடுநாள் அதிபர் அலி அப்துல்லா சலாவின் அரசாங்கத்துக்கு தான் காட்டிவரும் எதிர்ப்புக்காகவும் பலமுறை சிறை சென்றவர் இவர்.

நன்றி : பி.பி.சி. இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்வி, வவுனியா*

***கேள்வி: ராஜீவ் காந்தியின் படுகொலையில் குற்றவாளிகளாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ய வேண்டுமென நடாத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள், கோரிக்கைகள் பற்றி உங்களுடைய கருத்து என்ன?***

பதில்: சில பாரதூரமான குற்றங்களுக்குத் தண்டனையாக, இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் மரண தண்டனை அமுலில் இருக்கின்றது. ஒரு குற்றவாளிக்குத் தண்டனையாக தூக்கிலிட்டு, அல்லது மின்சாரம் செலுத்திக் கொல்வது ஒரு நாகரிக அரசியல் அமைப்பில் நல்லதில்லை, மனித நாகரிகத்திற்கு ஏற்புடையதல்ல. அதுவும், தூக்குத் தண்டனையை எதிர்பார்த்து, ஏறத்தாழ பல வருடங்களாக ஏற்கனவே சிறைவாசம் இருந்தவர்களுக்கு இவ்வளவு காலந்தாழ்த்தி தூக்கிலிடுவது மனிதாபிமானமற்றதோடு நல்ல சட்ட முறைமையுமாகாது. எனவே, மரண தண்டனையை சட்டத்திலிருந்து நீக்க வேண்டும், அந்த மூவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனை ரத்துச் செய்யப்பட்டு, அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட வேண்டும் என மனிதாபிமானம் கொண்டவர்களால், மனித உரிமை ஆர்வலர்களால் ஆர்ப்பாட்டங்கள், கோரிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கது.

ஆனால், புலிகள் மேற்கொண்ட படுகொலைகளை ஆதரித்தவர்கள், அவற்றிற்கு வக்காலத்து வாங்கியவர்கள், மரண தண்டனை மனிதாபிமற்றது, எனவே இம் மூவருடைய மரண தண்டனையையும் ரத்துச் செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டங்களையும், கோரிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு, அவைகளில் பங்கெடுப்பதற்கு, எந்த அருகதையோ யோக்கியதையோ கிடையாது. புலிகள் மேற்கொண்ட படுகொலைகளை எதிர்த்தோருக்கு மட்டுந்தான் இந்த மூவரது மரண தண்டனை மனிதாபிமான ரீதியில் ரத்து செய்யப்பட வேண்டும் எனக் கோருவதற்கு அருகதையும் யோக்கியதையும் இருக்கின்றது.

இந்த மூவரும், இந்தியாவின் பல மட்ட நீதிமன்றங்களினால் தீர விசாரிக்கப்பட்ட பின்னரே குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். புலிகள் எத்தனையோ கல்விமான்களை, அரசியல்வாதிகளை, அரசியல் ஆர்வலர்களை, புத்திஜீவிகளை, சமூகநலன் விரும்பிகளை, பொதுமக்களை எதுவித விசாரணையுமின்றி, நிர்த்தாட்சண்யமாக மரண தண்டனை அளித்து படுகொலை செய்யப்பட்டபோது, கொன்று குவித்தபோது, இந்தப் புலிகளின் மனித உரிமை, மனிதாபிமானக் குரல் எங்கே போனது? இந்த தார்மீகமற்ற, அறம் சாராத இரட்டை வேடக் கிராதகர்களாலல்லவா ஈழத்தமிழ் இனம் இன்றைய இழி நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. இத்தகையோர் தமிழர் அரசியலில் இருக்கும் வரை, இத்தகையோர்தான் ஈழத்தமிழர்களின் உரிமைகளை முன்னெடுக்கும் முக்கியஸ்தர்கள் என்று நினைக்கப்படும் நிலைமை தமிழர் மத்தியில் இருக்கும் வரை, தமிழர்களின் நல்வாழ்வு, விமோசனம் என்பதெல்லாம் வெறும் கானல் நீர்தான்!



*கனகசபாபதி, கல்முனை*

**கேள்வி: புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகளினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளினால், தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமைகளை எய்தும் வாய்ப்புகள் உள்ளனவா?**

பதில்: புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகளில், இன்னமும் பணபலப் பின்னணியும், முழு நேரமும் தம்மை ஈடுபடுத்தக்கூடிய ஆள் அணியும், வசதிகளும், எவற்றிற்கு இருக்கிறது எனப் பாரப்போமானால், பெரும்பான்மையானவை முன்னர் புலிகளுக்காகப் பணியாற்றியோர், பினாமிகளாகச் செயற்பட்டோர், புலித்தலைமைத்துவத்தின் அரசியல் அணுகுமுறைகளையும், செயற்பாட்டுகளையும் கண்மூடித்தனமாக ஆதரித்தோர், வக்காலத்து வாங்கியோர் ஆகியவர்களால் நடாத்தப்படுபவைகளில்தான் இருக்கிறது. இவற்றிற்கு புலம் பெயர்ந்த தமிழ் மக்களில், கடந்தவற்றையும் நடப்பவைகளையும் நிதானமாகச் சிந்திக்காது உணர்ச்சிவசப்படுபவர்கள், பழிக்குப் பழி வாங்க வேண்டும் எனத் துடிப்பவர்கள், 'தன்மானத் தமிழினம்' என்ற வார்த்தை ஜாலங்களால் உசுப்பேற்றப்பட்டு உலக பூகோள அரசியல் யதார்த்தங்களைத் அறியாத, சிந்திக்காத அப்பாவிகள், புலம் பெயர்நத நாடுகளில் வசதியான வாழ்க்கையோடு ஈழமும் கிடைத்தால் நன்றாக இருக்கும் என எண்ணுபவர்கள், அனைத்துத் தவறுகளும் சிங்கள மக்களுடையதே, தமிழர் தரப்பில் தப்பொன்றுமில்லை என்ற எண்ணத்தை சுவீகரித்துக் கொண்டவர்கள், இலங்கையில் தமிழர் மத்தியில் நிலவும் அரசியல், அன்றாட வாழ்க்கை விவகாரங்களை ஒரு பொழுதுபோக்காகக் கொள்பவர்கள் ஆகியோரது ஆதரவு இப்பொழுது குன்றியிருந்தாலும், இன்னமும் கணிசமாக இந்த அமைப்புகளை நடாத்துபவர்களுக்கு இருக்கிறது. இந்த ஆதரவு, தவறான வழிநடத்தல்களினால், பிழையான நோக்கங்களினால் வீணடிக்கப்படுகின்றது.

புலி அமைப்புகள் பல வெளிநாடுகளால் தடைசெய்யப்பட்ட இயக்கம், ஆனால் இன்னமும் இவர்கள் புலிக் கொடியையே தூக்கித் திரிவார்கள். மகிந்த ராஜபக்ஷ, கோத்தபய ராஜபக்ஷ மற்றும் இராணுவ மேலதிகாரிகளை போர்க்குற்றவாளிகளாக்க வேண்டும் சரி, ஆனால் அது எப்படி தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றெடுக்க, வாழ்வாதாரங்கள் பறிபோகாதிருக்க, பெருக்க, வழிவகுக்கும்? அதற்குப் பின் தமிழர்களின் உரிமைகளை அளிக்கக் கூடியவர்களை அதிகாரவர்க்கத்தில் அமர்த்துவதற்கு அது வழி வகுக்குமா? என்றால், அதனைப் பற்றி ஒரு தெளிவான சிந்தனையோ மார்க்கமோ கிடையாது. தாங்கள்தான் வெளிநாடுகளை கெட்டித்தனமாக மகிநத ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக செயல்பட வைக்கிறோம் என எண்ணுவார்கள். ஆனால் வெளிநாடுகள் தான் இவர்களை தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்துகிறார்கள் என எண்ண மாட்டார்கள்.

புலிகளின் பலத் துஷ்பிரயோகங்களும், அணுகுமுறைகளும் ஈற்றில் சிங்கள பேரினவாதிகளின் கரங்களைப் பலப்படுத்தி வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களை அழிவிற்கே இட்டுச் செல்லும் என ஆதங்கப்பட்டேன். தூரதிருஷ்டவசமாக அது நடந்துவிட்டது. அதில் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளதும், புலம் பெயர்ந்த தமிழர்களதும் பங்களிப்பு கணிசமானது.

புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளினதும், தமிழர்களினதும் இப்போதைய பல துஷ்பிரயோகங்களும், அணுகுமுறைகளும், சிங்கள பேரினவாதிகளினதும், அவர்களுக்கு நேரடி, மறைமுக ஆதரவு வழங்குபவர்களதும் கரங்களைப் பலப்படுத்தி, இலங்கையில் வாழும் தமிழர்களை இன்னமும் இன்னல்களுக்குட்படுத்தி மேன்மேலும் அழிவிற்கே இட்டுச் செல்லும் என ஆதங்கப்படுகிறேன்.

*மாணிக்கம், யாழ்ப்பாணம்*

**கேள்வி: தமிழர் தேசிய கூட்டமைப்பினரின் இப்போதைய நிலை என்ன?**

பதில்: சமீபத்தில் எங்கேயோ படித்த ஒரு உவமானம் ஞாபகம் வருகிறது—

"கோழிச் சண்டையைப் பார்க்கும் பிரமுகர்களுக்கு, வென்று காயப்பட்டாலும் சேவல் கறிதான், தோற்றுப் போனாலும் சேவல் கறிதான்"!

*தங்கராசா, பிரான்ஸ்*

**கேள்வி: இலண்டனில் தமிழ் நாட்டுத் திரையுலக நடிகர்கள் நடிகைகளையும், பின்னணிப் பாடகர்கள் பாடகிகளையும் கொண்ட நிகழ்ச்சிகள் பிரமாண்டமான அரங்குகளில் நடாத்தப்பட்டதாமே?**

பதில்: பெருமளவு தமிழர்கள் அதிக விலை நுழைவுச் சீட்டுகளை வாங்கி அவற்றிற்குச் சென்றார்கள் என்றும் கேள்விப்பட்டேன். பொங்கு தமிழ் நிகழ்வுகளில் பங்குபற்றி ஆர்ப்பாட்டக் கோஷங்கள் போடுவோருக்கும் சரி, இத்தகைய கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் பார்வையாளர்களுக்கும் சரி, இரண்டுமே நல்ல கொண்டாட்டம், அருமையான பொழுது போக்கு ஏற்பாட்டாளர்களுக்கு நல்ல வருவாய்! அந்த நிகழ்வுகளில் மக்களைக் குஷிப்படுத்த, கறவை மாடுகளாக மாற்ற, "தமிழர்கள் தனித் தமிழ் ஈழம் பெறுவது தவிர்க்க முடியாதது, அதற்கு நாம் உறுதுணையாக இருப்போம் அது வரை நாம் ஓயமாட்டோம்" என்று உரக்கப் பேசினாலே போதும்! ●

## மாகாண சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரம் - ஹெகலிய

மாகாண சபைகளுக்கு முழுமையாக பொலிஸ் அதிகாரம் வழங்குவது தொடர்பில் பிரச்சினை உள்ள போதும் அவற்றுக்கு ஓரளவு அதிகாரம் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

# குடாநாட்டில் வங்கிகளின் செயற்பாடு

**பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் யுத்தத்தின் பின்னர் ஏறத்தாழ 50ற்கும் மேற்பட்ட வங்கிகளும், நிதி நிறுவனங்களும் தமது கிளைகளை அமைத்துள்ளன. ஏலவே இயங்கிய மக்கள் வங்கி, ஹற்றன் தேசிய வங்கி, இலங்கை வங்கி, செலான் வங்கி போன்றவற்றுடன் பல புதிய வங்கிகளும் இணைந்து பிரதேசங்கள் தோறும் தமது கிளைகளை அமைத்து பரவலாக்கியுள்ளன. வங்கிகள் பிரதேசங்களில் அமைக்கப்படும் போது வடபகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென பொதுவாக நம்பப்பட்டது. மிகக் குறைந்த பிரதேச இளைஞர்கவே வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். பெரும்ளவு பணியாளர்கள் தென் பகுதியில் இருந்தே அழைத்து வரப்பட்டுள்ளனர்.

புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்கள் இங்கு அனுப்பும் பணத்தை வைப்பிலிடும் வாய்ப்பை பெறலாம் என்ற நோக்கிலேயே இவ் வங்கிகள் இங்கு படையெடுத்தன என்று பொருளியல் நிபுணர்கள் கூறினர். இப்பணத்தை பெற்று இப்பிரதேச அபிவிருத்திக்கான நிதி ஆதாரத்தைக் கொடுப்பதற்கு மாறாக தென்பகுதிக்கு அனுப்பும் செயற்பாடுகளிலேயே இவை பெரிதும் கவனம் கொள்கின்றன என்று பொருளியல் நிபுணர்கள் தற்போது கருதுகின்றார்கள். இது உண்மையில் பிரதேச அபிவிருத்திக்கான வழிமுறையல்ல. இது தமிழ் மக்களின் பணத்தை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லும் மறைமுக செயற்பாடு எனவே இவர்கள் குறைபட்டுக் கொள்கின்றார்கள்.

மேற்படி வங்கிகள் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல தமிழ் மொழிக்கு எதிரான இன்னொரு கைங்கரியத்தையும் மிகவும் நாசூக்காக செய்து வருகின்றன. உதாரணமாக மக்கள் வங்கி 20ற்கு மேற்பட்ட புதிய சேமிப்புக் கணக்குகளையும், கடன் வழங்கும் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியது. இவற்றைப் பற்றிக் குறிப்பிடும் தலைப்புகள் சிங்கள மொழியிலேயே விளம்பரப்படுத்தப்படுகின்றன. இதனை தமிழ் மக்கள் சிங்கள மொழி திணிப்பாகவே பார்க்கின்றனர். தமிழ் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை மதிப்பதாயின் அவர்களின் தாய் மொழியிலேயே இப்பெயர்கள் சூட்டப்பட்டு அழைக்கப்படுதல் வேண்டும். மாறாக சிங்கள மொழி பெயர்களே திட்டமிட்டு தமிழில் புகுத்தப்படுகின்றன. உதாரணமாக இசுரு உதான, சிசு உதான, ஜனஜய, வனிதா வாசனா, போன்ற சேமிப்பு திட்டங்களும் குருசீதா, சௌபாக்கியா, கப்னிகா, கப்துரா, பாபசு, ஜெயனிவாசா, விதாதா, நவசாப்னி, கோவிசகன்யா போன்ற கடன் உதவித்திட்டங்களும் விளம்பரப்படுத்தப் படுகின்றன. பரிணாத என்ற மூத்த பிரஜைகளின் வங்கிக்கணக்கினையும் இவ் வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது. இதன் அர்த்தம் புரியாமல் திண்டாடும் தமிழ் மக்கள் ஒரு புறம் இருக்க தமிழ் மொழியில் இவை வலுக்கட்டாயமாக திணிக்கப்படுவதாகவே இங்கு வாழும் மக்கள் விசனம் தெரிவிக்கின்[illegible] தேசிய வங்கி, சிங்கிதி [illegible] திரிகிதி ஹிரிக்கற்றியோ போன்ற சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்தியுள்ளது. சிறுவர்கள் இதன் அர்த்தத்தை பெற்றோரிடம் கேட்க அவர்களும் புரியாது முளிக்கின்றனர். யூனியன் வங்கி ரன்வன் என்ற கணக்கினையும், இலங்கை வங்கி காந்தாரண்நய, கித்துளு போன்றவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சொற்களுக்கான அரத்தம் புரியாதிருப்பதோடு இப்பெயர்களை உச்சரிப்பதும் தமிழ் மக்களுக்கு கடினமாக இருப்பதோடு தமிழ் மொழியில் இவற்றைத் திணிப்பதாகவே மக்கள் கருதுகின்றனர். இப்பிரதேச மக்களை நம்பி உருவாக்கப்பட்ட அரச, தனியார் நிறுவனங்களான இவை அப்பிரதேச மக்களின் மொழிக்கு உரிய கௌரவத்தை, மதிப்பைக் கொடுக்காமையை யிட்டு மக்கள் தம் அதிருப்தியை தெரிவிக் கின்றார்கள்.

நன்றி : இணையம்

# நியாயமான தீர்வை முன்வைப்பதன் மூலமே பேரினவாத கடும் போக்காளர்களை கட்டுப்படுத்த முடியும்

**புளொட் தலைவர் – த. சித்தார்த்தன்**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நியாயமான அரசியல்தீர்வை முன்வைப்பதன்மூலமே பேரினவாத கடும் போக்காளர்களை கட்டுப்படுத்த முடியும் என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். தமிழர் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனேயே பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார். தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார். இவ்வாறானதோர் தருணத்தில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டுமென்று தெரிவித்துள்ளது. இன்னொரு அமைச்சர் பயங்கரவாதத்திற்கு துணை போனவர்களுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை வேண்டுமென தெரிவித்துள்ளார. இவ்வாறான கருத்துக்கள் சுமூகமான தீர்வை காண்பதற்கு முட்டுக்கட்டையாக அமையும். பெரும்பான்மையான சிங்களமக்கள் மத்தியில் இனவாதம் கிடையாது. இவ்வாறான கருத்துக்களால் இனவாதம் ஊக்குவிக்கப்படும். பழைய பிரச்சினைகளை மீண்டும், மீண்டும் கிளறிக் கொண்டிருப்பதால் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை. இவ்வாறான நடவடிகைகள் இருதரப்பு கடும் போக்காளர்களுக்கு சாதகமாக அமையும். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் யதார்த்தம். அத்தோடு இவ்வாறான கருத்துக்கள் தமிழ்மக்கள் மத்தியிலும் சர்வதேசத்திலும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும். எனவே ஜனாதிபதி தமிழ்மக்களுக்கான அரசியல்தீர்வை முன்வைக்க வேண்டும். இதன்மூலமே கடும் போக்காளர்களை கட்டுப்படுத்த முடியும். தமிழ்மக்களுக்கு தீர்வை வழங்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மற்றும் 10 ஆண்டு திட்டம் இல்லாதொழிக்கப்பட்டது

## தொழிற்சங்கவாதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கருத்து

ஐ.நா சபையின் புத்தாயிரமாம் ஆண்டின் வளர்ச்சித்திட்டம் (Millennium Development Goal) என்ற திட்டத்தின்கீழ் இலங்கையின் மலையகத்தின் வளர்ச்சிக்காக தீர்வுகாணும் நோக்கில் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் தோட்ட உட்கட்டமைச்சு எனும் தனி அமைச்சு உருவாக்கப்பட்டது. 2006ம் ஆண்டு தற்போதைய அரசினால் பத்தாண்டு திட்டம் உருவாக்கப்பட்டது. 10 ஆண்டுத் திட்டம் கைவிடப்பட்டது பற்றி தொழிற்சங்கவாதிகள், பொது மக்கள் பி.பி.சி தமிழோசைக்கு தெரிவித்த கருத்துக்கள்.



**ஓ.ஏ. இராமையா**
(பெருந்தோட்ட சமூக மாமன்ற தலைவர், தொழிற்சங்கவாதி)

ஐ.நா வின் அபிவிருத்தி நிதியமும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சும் இணைந்து வறுமை நிலையை குறைக்க வேண்டுமென்ற ஐ.நா வின் கோரிக்கைக்கு ஏற்ப இது ஒரு முக்கியமான அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. பெரும்பான்மை இன சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் தோன்றிய அதிருப்தியும், இது மத்திய அரசாங்கத்தின் கீழேயே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளும் 10 ஆண்டுத் திட்டம் கிடப்பில் போடப்பட்டமைக்கு காரணமாகும். பெரும்பான்மையின அரசியல் சக்தியின் பேரின வாத கொள்கையின் பிரதிபலிப்பாகும். எதிர் கால வளர்ச்சித்திட்டத்துக்கு இதுவொரு பின்னடைவானதும், பாதகமானதுமாகும். துரித வளர்ச்சித் திட்டத்துக்கோ அல்லது பின்தங்கிய மக்களுக்கான விசேட சலுகையையோ வழங்கப்படாது தடுக்கப்படுகிறது. கடந்த காலங்களில் இந்திய வம்சாவளி மக்களுக்கென கோட்டா வழங்கப்பட்டது. அதாவது அரசு சேவையிலோ, அல்லது அதிகாரிகள் நியமனங்களிலோ ஓரிருவர் நியமிக்கப்படுவர். விண்ணப்பப்படிவங்களில கூட சிங்களவர், தமிழர், இந்திய வம்சாவளியினர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது அது மாற்றப்பட்டு எல்லோரும் சமமாக கருதப்படும் போது முன்கூட்டியே பின்தங்கிய நிலையில் இவர்களால் முன்னேறி வருவதென்பது கஷ்டமானதாகும். மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறும் போது 10 ஆண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது இம் மக்களை பொறுத்தவரை பின்னடைவே ஆகும். அரசியல் தலைமைகளுக்கும் தோல்வியாகும்.



**பெ. முத்துலிங்கம்**
(தொழிற்சங்கவாதி)

பத்தாண்டு திட்டத்தில் சுகாதாரம் வைத்திய வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு திறன் தேர்ச்சி, வீட்டுத்திட்டம், உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி, பால் நிலை சமத்துவம், மனித உரிமைகள் எவ்வாறு பேணப்பட வேண்டும், அதற்கான வேலைத்திட்டம் என்பன பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தை தயாரிக்கும் போது மலையகத்தைச் சார்ந்த, பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள், புலமைசார் நபர்கள் சிவில் சமூகத்தை சார்ந்த நபர்கள் என்போர் இணைந்தே இத் திட்டம் தீட்டப்பட்டது. இந்த துறைகளில் காணப்படுகின்ற வளர்ச்சி அல்லது குறை வளர்ச்சியை அடையாளம் கண்டு குறைவளர்ச்சியை நீக்கி ஏனைய சமூகங்களுடன் சமத்துவமாக வாழ்வதற்கான ஒரு சிறப்பு திட்டமாக முன்னெடுக்க வேண்டுமென்றே நோக்கில் உருவாக்கப்பட்டது. அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டது. இத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறதென்றால் இந்த சமூகம் பொதுவான அபிவிருத்தியில் ஈடுபட்டிருந்தாலும் கூட ஏற்கனவே உள்ள ஏற்றத்தாழ்வு நிலைக்கும். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது சமூக பொருளாதார வேலைவாய்ப்பு ஆகியவற்றில் இவர்கள் பின்தங்கியவர்களாகத்தான இருக்கிறார்கள். 10 ஆண்டுத் திட்டம் கிடப்பில போடப்பட்டதானது தொடர்ந்தும் இந்த சமூகத்தை குறைவளர்ச்சி கொண்ட சமூகமாக இருக்கக்கூடிய சூழலைத்தான் தோற்றுவிக்கும்.



**வேலாயுதம்**
(தொழிற்சங்கவாதி)

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் ஆட்சிகாலத்தில் பெருந்தோட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட பெருந்தோட்ட உட்கட்ட அமைச்சு இன்று ஜனாதிபதி மகிந்த அரசாங்கத்தினால் இல்லாதொழிக்கப்பட்டது. தற்போது அதுவொரு திணைக்களமாக இயங்குகிறது. அதுபோலவே ஜே.ஆர். அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட இந்து கலாச்சார அமைச்சும் இல்லாதொழிக்கப்பட்டு வெறும் திணைக்களமாக செயற்படுகின்றது. இந்த இரு அமைச்சுக்களும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பேரிழப்பு. இந்த அமைச்சுக்கள் இருந்தபோது நாங்கள் தொழிற்சங்க ரீதியில் வேறுபட்டிருந்தாலும் பொது வேலைத்திட்டங்களுக்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மலையகத்துக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு 10 ஆண்டு திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற ரீதியில் எல்லோருடைய கருத்துக்களும் பெறப்பட்டு ஆரம்பிக்கபட்து. சிறு சிறு வேலைகள் திணைக்களங்கள் ஊடாக நடைபெறுகின்றன. தொடர்ந்தும் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்கள் சலுகைகளை பெறும் சமூகமாக அன்றி முழு உரிமைகளை பெற்ற சமூகம் என கூற முடியாது. மலையக தலைமைகள் மத்தியில் காணப்படுகின்ற போட்டி காரணமாகவும், அண்மை காலத்தில் சிறுபான்மை இன மக்களின் வாக்குகள் இல்லாமல் ஆட்சியமைக்கலாம் என்ற தேர்தல் முடிவுகளும் இதை வெளிப்படுத்துகின்றன. தீர்மானிக்கின்ற சக்தியின் தன்மை வலு குறைந்தமையில் புறக்கணிப்புக்கான காரணமும், இவர்கள் இல்லாமல் ஆட்சியமைக்கலாம் என்ற பெரும்பான்மையில கோட்பாடு வலுவடைந்திருக்கின்றமையும் மலையக மக்கள் புறக்கணிப்புக்கு காரணம் எனலாம்.



**எம்.வாமதேவன்**
(முன்னாள் உட்கட்டமைப்பு அமைச்சு செயலாளர்)

2006ம் ஆண்டு உருவாக்கப்பட்ட 10 ஆண்டு திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டது. ஆனால் அதற்குப்பின்னரான மாற்றங்களால் நடைமுறைப்படுத்துவதற்கு பல ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருந்தாலும் முறையாக இடம்பெறவில்லை. இத் திட்டங்களுக்காக வரவு செலவு திட்டத்தில் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் நடைமுறைப்படுத்துவதற்கான நிலையை எட்டும். சில சில விடயங்களில் ஒதுக்கீடுகள் இடம் பெற்றிருந்தாலும் திட்ட அடிப்படையில் ஒதுக்கீடுகள் இடம்பெறவில்லை.

**பொது மக்களில் ஒருவர்**

இந்த அரசின் 10 ஆண்டுத் திட்டத்தின் ஊடாக அபிவிருத்தியையும், நன்மைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று பெரும் நம்பிக்கையுடன் இருந்தோம்.. இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டதானது இந்த அரசின் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு பதிலாக ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

**மற்றவர் ஒருவர் தெரிவிக்கையில்**

மலையக அரசியல்வாதிகளிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையாகும். அரசுக்கு ஆதரவு வழங்கியதன் காரணமாக இதனை கொண்டு வந்த அரசாங்கமே இதனை இல்லாதாக்கியுள்ளது. மலையக மக்களுக்கான உரிமையை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இல்லாதொழிக்கும் நிலையாகத்தான் இருக்கிறது. 10 ஆண்டு திட்டம் கிடப்பில் போடப்பட்டதானது மலையக மக்கள் ஏனைய சமூகத்தினருடன் சரிக்கு சமானமாக வாழ்க்கை தரத்துடன் வாழ்வதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும். வறுமை நிலையில் மலையகம் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. இவ்வாறான பிரச்சினைகளின் அடிப்படையை கொண்டுதான் 10 ஆண்டு திட்டம் கொண்டுவரப்பட்டது. இது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் மேம்பாட்டை பெற்றிருக்கலாம்.

## பட்டதாரிகளின்.. (1ம் பக்க தொடர்...)

ஒருநாள் தமக்கும் நியமனம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் இந்த நடைமுறையால் வருடா வருடம் கிழக்கு மாகாணத்தில் 2500 பேர் நியமனம் கிடைக்காமல் இருந்து கொண்டே வருகின்றனர்.

ஆனால் இதையும் சீர்குலைக்கும் வகையில் நியமன விதிகளுக்கு மாறான செயற்பாடுகள் ஊடாக சில அரசியல்வாதிகள் ஒருசிலருக்கு நியமனம் வழங்க முயற்சிகள் மேற்கொள்வதால் பட்டதாரிகள் மத்தியில் விரக்தியும் மனக்கவலையும் தாண்டவமாடுகிறது

விசேடமாக தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வாக்குகளைபெறும் நோக்கில் பல பொய்களை கூறி ஏமாற்றுகின்றனர். இதனால் அரசியல் வாதிகள் அனைவரையும் வெறுக்கும் அளவிற்கு அவர்களின் மன நிலை உள்ளது. இந்த அரசியல்வாதிகள் மனிதத்தன்மை உடையவர்களாக இருந்தால் பொய்வாக்குறுதிகளை கூறாமல் 45வயதை எட்டப்போகின்றவர்களுக்கும், விசேடதகைமை உள்ளவர்களுக்கும் இந்நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலதிகமாக உள்ள பட்டதாரிகளின் நலன்கள் தொடர்பாக கிழக்கு மாகாணசபை ஒரு திட்டத்தை முன்வைத்து செயற்படவில்லை பட்டதாரிகள் அரசியல்வாதிகளையும் அமைச்சர்களையும் சந்தித்தும் வெகுஜன போராட்டங்களை நாடாத்தியும் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிகள் எடுக்கும் போதெல்லாம் ஆளணி இல்லை பணம் இல்லை என்று மகாணசபை கூறுகிறது. மேலும் இது மத்திய அரசின் வேலை என்றும் கூறி மாகாணசபை தப்பிக்கப் பார்க்கின்றது.

அப்படியானால் எதற்கு இந்த மாகாணசபை என்று பட்டதாரிகள் கேட்கின்றனர் இவ்விடயம் தொடர்பாக ஆரையம்பதி நந்தகோபன் கலாச்சார மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் பிரதீபன், செயலாளர் வேலையற்ற கணக்கியல் பட்டதாரிகள் சங்க செயலாளர் . முபாறக் தலைவர் ஆகியோர் தலைமையில் கலுந்தரையாடல் நடாத்தப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு கடிதங்களை அனுப்பபோவதாக தீர்மானித்துள்ளனர்.

கிழக்கு மாகாண பட்டதாரிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அனைத்துக் கிழக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் தோளோடு தோள் சேர்ந்து முயற்சிகள் எடுக்க முன்வரவேண்டும் . ●

## பாதாள உலக கோஷ்டியினரின் பின்னணி - சம்பிக்க ரணவக்க

பாதாள உலகக் கோஷ்டியினரின் ஆயுதக் கலாசாரத்தில் இருந்து தேசிய அரசியலை மீட்க தேர்தல் முறைமைகளில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். புதிய சட்ட மூலங்கள் ஊடாக குற்றவாளிகளையும் பல்வேறு மோசடிக்காரர்களையும் தேசிய அரசியலுக்குள் உள்வாங்கப்படாதவாறு புதிய வழி முறைகளை வகுக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

## சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை
### - அமைச்சர் ராஜித சேனரத்தன -

ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவருக்கே இன்று சுதந்திரமாக நடமாட முடியாத நிலை இந்நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஒழுக்கமற்றவர்களை பக்கத்தில் வைத்திருப்பதால்தான் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என முல்லேரியாவில் நடைபெற்ற சம்பவம் சம்பந்தமாக மீன்பிடி, நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்தின சிலாபத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

## நுவரேலியா மாநகரசபைக்கு 6 சிறுபான்மையினர்

2011ம் அக்டோபர் 08ம் திகதி நடைபெற்ற நுவரெலியா மாநகரசபையின் பத்து உறுப்பினர்களில் ஆறு சிறுபான்மையினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

01. மாரியப்பன் சந்திரன் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்)
02. இராதாகிருஷ்ணன் ராஜாராம் (மலையக மக்கள் முன்னணி)
03. மொஹமட் பலீல் (ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு)
04. கே. சந்திரசேகர் (ஐக்கிய தேசிய கட்சி)
05. எல். நேருஜி (ஐக்கிய தேசிய கட்சி)
06. இராமையா கேதீஸ் (இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி)

2006ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐ.தே.க சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்களில் மூவரும், இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி சார்பில் ஒருவருமாக மொத்தம் நான்கு சிறுபான்மையினர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மாற்றத்திற்கான உலகளாவிய மக்கள் எழுச்சிகள்

அமெரிக்க வால்தெரு போராட்டம் இன்றைய உலகமயமாக்கலின் எதிரொலி அமெரிக்காவில் உலக கோடீஸ்வரர்கள் வாழும் மையமான வால் தெருவில் (Wall Street) போராடமாக வெடித்துள்ளது. அமெரிக்கர்களில் 90 சதவீதமானவர்களின் உழைப்பை ஒரு சத வீதமானவர்கள் சுரண்டி வாழ்கிறார்கள் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கிறார்கள். இது அமெரிக்காவின் வேறு மாநிலங்களுக்கும் பரவியுள்ளது. மேற்கு உலகில் கிரேக்கம், ஸ்பெயின், இங்கிலாந்து என மக்கள் வீதியில் இறங்கியுள்ளார்கள். பெரிய பெரிய பகாசுர நிறுவனங்கள் (காப்ரேட்டுக்கள்) பெருவாரியான மக்களின் வாழ்வை ஓட்டாண்டி நிலைக்கு தள்ளியுள்ளது.




மேற்குலகு வடஅமெரிக்காவின் நிலை இது என்றால் எமது நிலையை எண்ணிப்பாருங்கள்.

தொழிலாளர்கள் கிளர்ச்சிகள் மக்கள் எழுச்சிகள் மத்திய கிழக்கிலும், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன.

அநீதியான உற்பத்தி முறைக்கு எதிரான இந்த கிளர்ச்சிகள் வளங்கள் சமத்துவமாக பகிரப்பட வேண்டும் என்பதையும் உணவு, கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் நிகழும் ஈவிரக்கமற்ற சுரண்டலுக்கு எதிரான குரல்களாக வெளிப்படுகின்றன.

தொழிலாளர்கள் விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள் மற்றும் சிற்றுடைமையாளர்கள் சமூக நீதியை கோரிநிற்கிறார்கள்.

தீவிரமான மாற்றங்களை உலகளாவியளவில் வரலாறு கோரி நிற்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர்களை நினைவு கூருகின்றோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து ஒக்ரோபர் மாதத்தில் உயர் நீத்த தோழர்கள். அவர்களின் உழைப்புக்களும், தியாகங்களும் வீண்போகாது அவர்களுடைய பணியை, நம்பிக்கைகளை முன்னேடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு எமது அஞ்சலியை சொலுத்துவோம்.









| பெயர் | ஸ்தாபனப் பெயர் | இறந்த திகதி | இடம் | இறப்புக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | சாமி | 04.10.1988 | இடைக்காடு, அச்சுவேலி | புலிகள் |
| தேசிலிங்கம் நாகேந்திரராஜா | ராஜன், அமீன் | 15.10.1989 | மயிலிட்டி | புலிகள் |
| ஆரோக்கியநாதன் சுரேஸ்குமார் | ஜீவா | 22.10.2011 | வளலாய், அச்சுவேலி | புலிகள் |
| பொ. சிறிதரன் | | 00.10.1990 | மயிலங்காடு | புலிகள் |
| ஆழ்வான் நேசராசா | சுரேஸ் | 17.10.1988 | ஞானவைரவர் கோவிலடி, கரவெட்டி | புலிகள் |
| தம்பாபிள்ளை தம்பிராசா | | 23.10.1989 | வீரபத்திரர் வீதி, நுணாவில் | புலிகள் |
| கந்தன் மார்க்கண்டு | | 00.10.1990 | மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி | புலிகள் |
| கைலாயப்பிள்ளை சுதாநிதி | சுதா | 18.10.1985 | காரைதீவு - 02 | எஸ்.ரி.எவ் |
| எஸ். பிள்ளைநாயகம் | கிருபா | 18.10.1985 | குறுமண்வெளி | எஸ்.ரி.எவ் |
| ஏ.செல்வகுமார் | குணம் | 22.10.1985 | கல்லாறு | எஸ்.ரி.எவ் |
| ஏ. தேவநாதன் | நிர்மல் | 05.10.1985 | மண்டூர், மட்டக்களப்பு | எஸ்.ரி.எவ் |
| எஸ். சிவப்பிரகாசம் | ரஞ்சித் | 05.10.1985 | களுவாங்கேணி | புலிகள் |
| பி. சின்னத்தம்பி | கறுவல் | 24.10.1989 | நாசிவன்தீவு | புலிகள் |
| என். சூட்டி | கெஸ்ரின் | 17.10.1989 | பேத்தாளை | புலிகள் |
| எஸ் ஆறுமுகம் | மதி | 17.10.1989 | நாசிவன்தீவு | புலிகள் |
| ஆர். வீரசிங்கம் | சேகர் | 26.10.1989 | சித்தாண்டி | புலிகள் |
| கே. சத்தியசிவநாதன் | பாலா | 26.10.1989 | காத்தான்குடி | புலிகள் |
| சின்னத்துரை கருணாகரன் | பேபி | 12.10.1989 | 13ம் கொலனி, மண்டூர் | புலிகள் |
| | நித்தி | 07.10.1985 | ஆரயம்பதி | |
| ஐ. முருகானந்தம் | காளி | 30.10.1985 | காரைதீவு - 02 | |
| தைரியராஜா | நாகேஸ், தைரி | 13.10.1987 | நற்பிட்டிமுனை. மட்டக்களப்பு | புலிகள் |
| கந்தையா யோகதாசன் | திலகன் | 16.10.1986 | நெடுந்தீவு | கடற்படை |

## அர்த்தங்கள்

**முதலாளித்துவம்**

வாய்க்கு இனிப்பையும்
உடலுக்கு சர்க்கரை வியாதியையும்
தரும் விருந்து..

**சோசலிசம்**

வாய்க்கு கசப்பையும்
உடலுக்கு உறுதியையும்
தரும் மருந்து..

**உலகமயமாக்கல்**

வீட்டில் இருந்து சுரண்டியவன்
அடுத்த ஊரிலும் சென்று சுரண்டுகிறான்
சீனாவுக்கு சளி பிடித்தால்
அமெரிக்காவுக்கு தும்மல் வரும்..

**பணவீக்கம்**

விளக்குகள் விற்றவர்கள்
கடையை மூடி விட்டனர்
திரி விற்கும் கடை நாளை திறப்பு ..
எண்ணை மட்டும் விற்பதில்லை
என்ற சட்டம் முதலாளிகளுக்குள்..
இதை அறியா மக்கள்
எரியா விளக்குகளோடு வீதியில்..

**ஐரோப்பிய ஜனநாயகம்**

பேச்சுரிமை எழுத்துரிமை
அத்தனை உரிமைகளோடும்
பட்டினி கிடப்பவனும் வீதிக்கு வந்து
கொடி பிடிக்கும் உரிமை தரும்..

**நம்மூர் ஜனநாயகம்**

ஓட்டுப் போடும் உரிமையும்
கள்ள வோட்டில் பறிபோகும்
ஆழ்பவன் புகழ் பாடினால் மட்டும்
பேச்சும் எழுத்தும் சுதந்திரமாய்..

**யாழ்ப்பாணத்தான்**

பலர் கால் கடுக்க நின்ற போதும்
தபால் வண்டியின் இருக்கையில்
நீட்டி நிமிர்ந்து உறங்கி செல்வான்..

**கண்ணீர்**

இதயம் வலி கொள்ள
கண்கள் உதிர்க்கும் உணர்வலை
இதயம் இல்லாத முதலைகளும்
கண்ணோரம் வார்க்கும் நடிப்பலை..

**தியாகி**

முள்ளிவாய்க்காலில்
தீயிடப்பட்ட அகராதியில்
துரோகிக்கு மறுபெயர்..

போல்

பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
පත්මනාභා ඊළාම් ජනතා විප්ලවීය විමුක්ති පෙරමුණ
Pathmanabha Eelam Peoples' Revolutionary Liberation Front

No.15-C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05, Tel: 2505372, Fax: 2552840

### நாம் எழுந்து நிற்பதற்கு ஒரு நியாயமான இடைவெளி குறைந்தபட்ச அதிகாரக்கட்டமைப்பு அவசியம்.

குறைந்தபட்ச அதிகாரப்பகிர்வு கட்டமைப்பாவது உருவாக்கப்படாவிட்டால் தமிழ்ச்சமூகம் தனது அடையாளங்களை இழப்பதோடு பேரினவாத ஆக்கிரமிப்பில் கரைந்து உருக்குலைந்து போகும் நிலையை யாரும் தடுக்க முடியாத நிலை ஏற்படலாம்.

கிழக்கில் நடந்து முடிந்த வடக்கில் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் கலாச்சார குடியேற்ற இராணுவ மயப்பட்ட ஆக்கிரமிப்புக்கள் மொத்தமாகவே இன்னும் ஓரிரு தசாப்தங்களில் தமிழ் மக்களின் அடையாளங்களை வாழ்வியலை பாரதூரமாக சிதைத்துவிடலாம்.. இதே நெருக்கடிகளை மலையக, முஸ்லீம் மக்களும் எதிர்நோக்குகிறார்கள்.

நிலம், நிதி, பொலிஸ், நீதித்துறை அதிகாரங்கள் தொடர்பில் கூடிய கரிசனை எடுத்து செயற்பட வேண்டியிருக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் இந்த விடயங்கள் தொடர்பில் எவ்வளவுதூரம் முன்னேற்றம் இருக்கிறதென்பதில் தெளிவில்லை.

எனினும் தமிழ் மக்களின் நலனிலும், சமூக ஜனநாயகத்திலும் அக்கறையுள்ள அனைத்து அரசியல் சமூக சக்திகளும் இணைந்து விரைவாக செயற்பட வேண்டிய காலமிது. புத்தி சாதுரியத்துடனும், துணிச்சலுடனும் யதார்த்த நிலைமைகளை கருத்திற்கெடுத்து செயற்பட வேண்டும். தவறவிடப்படும் சந்தர்ப்பம் தமிழ் மக்களின் எதிர்காலத்தை பாரதூரமான நிலைக்கு இட்டுச்செல்லலாம்.

வாழும் சந்ததியும், வருங்காலச் சந்ததியும் தூற்றாமல் இருப்பதற்கு உரிய வழியில் நாம் செயற்பட வேண்டும். ஒரு அதிகாரப்பகிர்வு கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு தொடர்ச்சியாக சமஷ்டி முறையிலான முழுமை பெற்ற கட்டமைப்பை நோக்கி செயற்பட வேண்டும்.

ஆரம்பத்திலேயே முழுமை பெற்றதொரு கட்டமைப்பு ஏற்பட்டுவிடாது. பேரினவாத இராணுவ மேலாதிக்க மனோநிலை நெகிழ்வு தன்மையுடையதாக இருக்குமென்று நாம் எண்ணிவிட முடியாது. அத்தகைய எண்ணம் பாமரத்தனமானது.

சர்வதேச பிராந்திய கோரிக்கைகளை முழுதாக செவிமடுக்கும் என்றில்லை. நிர்ப்பந்தங்களில் ஏதாவது வேண்டா வெறுப்பாக அல்லது ஏனோதானோ என்று நிகழும். ஆனால் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற முதுமொழியை கணக்கில் எடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

ஆனால் இலங்கையின் நிலை தொடர்ந்து அவ்வாறுதான் இருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஜனநாயக சூழல் நாடளாவியளவில் உருவாகும் போது பல்லினங்களின் நாடு என்ற கருத்து நிலையும் வலுவடையும்.

இப்போது நாம் எழுந்து நிற்பதற்கு ஒரு நியாயமான இடைவெளி குறைந்தபட்ச அதிகாரக் கட்டமைப்பு அவசியம்.

ஆக்கிமிடிசின் வார்த்தையில் கூறுவதானால் இருப்பதற்கு ஒரு இடமும் தெண்டுவதற்கு ஒரு கோலும் தேவை.

## இதய அஞ்சலி

உதயம்
19
12
1961

மறைவு
19
11
2011



**தோழர் நாபா (காத்தமுத்து விசுவலிங்கம்)**

தோழர் காத்தமுத்து விசுவலிங்கம (நாபா) சென்னை மருத்துவமனையில் அகால மரணமானார். அவர் மட்டக்களப்பு சித்தாண்டியை பிறப்பிடமாக கொண்டவர். 1983ல் இருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து சமூக அரசியல் விடுதலைக்காகப் பாடுபட்டவர். இந்தியாவில் புழல் அகதிகள் முகாமில் தனது மனைவி மகளுடன் வாழ்ந்து வந்தவர்.17ம் திகதி அவர் தனது ஆட்டோவை ஓட்டிச் சென்ற போது ஒரு விபத்தில் சிக்கி பலத்த காயமடைந்தார். இதற்கு முன்னரும் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு விபத்தில் அவரது ஒரு காலில் முறிவு ஏற்பட்டது. ஆனாலும் அவர் சோர்ந்துவிடாத அயராத உழைப்பாளியாக இருந்தார். அவர் தோழர்களாலும் நண்பர்களாலும் அயலவர்களாலும் மிகவும் நேசிக்கப்பட்டவர். எல்லோருக்கும் உதவி புரியும் மனோபாவம் அவருக்கு இருந்தது. எப்போதும் இன்முகத்துடன் காணப்படுவார். அவரின் இறுதிச் சடங்குகள் 20.10.2011 சென்னை புழலில் நடைபெற்றது.

அன்னாரின் மறைவிற்கு பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

## 2012ம் ஆண்டுக்கான பாதுகாப்புக்கான நிதி அதிகரிப்பு

2012ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்பு செலவு 22,994 கோடியே 30 இலட்சம். ரூபா. கடந்த வருடம் 21,683 கோடியே 16 இலட்சம். அந்த வகையில் அடுத்த வருடத்துக்கான அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு செலவினம் 1,311 கோடியே 11 இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு 11,718 ஆயிரம் கோடியே [illegible] 300 ரூபா, பௌத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சுக்கு 1773 கோடி ரூபா, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு 12,421 கோடியே 61 இலட்சத்து 74 ஆயிரம் ரூபா,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 10,457 கோடியே 13 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா, அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு 1 இலட்சத்து 141 கோடியே 90 இலட்சம் ரூபா, தபால் சேவை அமைச்சுக்கு 819 கோடியே 90 இலட்சம் ரூபாயும் நீதி அமைச்சுக்கு 423 கோடியே 73 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 29ஏ. வாவிக்கரை வீதி. மட்டக்களப்பு அவர்களால் இல 119. பல்கலைக்கழக வீதி. இரத்தினபிட்டிய. பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.